# காட்டிலே

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் அனுபவங்கள்

1



நான் அதிமகிழ்ச்சி கொண்டு என் கரங்களையுயர்த்தினேன். என் கன்னங்களின் வழியாக கண்ணீர் வழிந்தோடியது. அந்த மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடினேன். எனக்கு மகிழ்ச்சியான தருணம் உண்டாயிருந்தது.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி:

## 60-04-03 கழுகு தன் கூட்டைக் கலைக்கிறது போல (தேவனின் கழுகுகள்)

58. சில ஆண்டுகளுக்கு முன்பு நான் மாட்டுப்பண்ணையில் அதிகம் குதிரை சவாரி செய்வது வழக்கம்.

நாங்கள் அப்பொழுது கொலராடோவிலுள்ள ட்ரபுல்சம் ஆற்றண்டை சென்றிருந்தோம். ஹெரிஃபோர்டு ரக மாடுகளின் சங்கம் மலைகளின் மேலுள்ள அரபாஹா புல்வெளியில் அந்த மாடுகளை மேயவிடுகின்றது. நாங்கள் இந்த ரக மாடுகளை மலைகளின் மேல் அந்த இடத்திற்கு கொண்டு செல்வோம். இலையுதிர் காலத்தின் போது அவைகளை ஒட்டி வந்து தேசீய காட்டில் விட்டு, அவைகளுக்கு குளிர்காலத்தில் தீனி கொடுக்க மலையடி வாரத்தில் வைக்கோலை தயார் செய்வோம்.



59. நான் ஒவ்வொரு ஆண்டும் வேட்டைக்காக அங்கு செல்வது வழக்கம். இப்பொழுது அதை செய்து கொண்டிருக்கிறேன். நகரத்திலுள்ள ஜனங்கள் அங்கு சென்று பெண்மான்கள், மான் குட்டிகள், இளம் பசுக்கள், வழிதப்பித் திரிந்த ஆண் கடம்பை மான்கள் போன்றவைகளை கீழ் மட்டத்தில் வேட்டையாடி விட்டு சென்ற பிறகு, நானும் என் நண்பர் ஒருவரும் அங்கு வேட்டைக்குச் செல்வது வழக்கம். நாங்கள் எப்பொழுதுமே எவருக்கும் எட்டாத உயரத்தில் சென்று அங்கு முகாமை

அமைப்பதுண்டு. என் நண்பர் கிழக்கு அல்லது மேற்கு பிரிவில் செல்வார். நான் மற்ற பிரிவில் செல்வேன். அநேக நாட்கள் கழித்து நாங்கள் ஒருவரையொருவர் சந்திப்போம்.



60. இதை என்னால் மறக்க முடியாது, ஒரு ஆண்டு பனி பெய்யவில்லை.

வழக்கமாக பனி பெய்யும் காலம் அக்டோபர் மாதம்.

61. அந்த மாதத்தில் மலையின் மேல் பனி பெய்தால், பிற்பகலில் அது மிகவும் அதிகமாக பெய்யக்கூடும். உதாரணமாக ஒரு மணி நேரம் பனி பெய்து கொண்டிருக்கும், பிறகு மழை பெய்து பனியை போக்கி விடும், அதன் பிறகு சூரிய வெளிச்சம் உண்டாகும். இப்படியாக சீதோஷ்ண நிலை மாறிக் கொண்டேயிருக்கும். பனி பெய்யும்போது, நாகரீக சத்தத்தை விட்டு நீங்கி உயரே தங்கியுள்ள பெரிய உருவம் படைத்த கடம்பை மான்களையும், மான்களையும் அது பள்ளத்தாக்கிற்கு விரட்டியடித்து விடும். அங்கு தான் நீங்கள் வழக்கமாக உங்கள் வேட்டைப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

62. அந்த ஆண்டு பனி பெய்யத் தொடங்கவில்லை. நான் உயரே சென்றிருந்தேன். என் குதிரையை, அது நடமாடுவதற்கு போதிய இடம் கிடைக்கவும், அது தீனி உண்பதற்காகவும் பல மைல்கள்

கீழே கட்டி விட்டு, நான் மரங்களுக்கிடையே கவனித்துக் கொண்டே மேலேறிச் சென்றேன்.



63. அன்று பிற்பகல் மலைகளில் புயல் காற்று அடித்து, இடியிடித்து, மின்னல் அடித்தது. புயல் தீரும் வரைக்கும் நான் ஒரு

மரத்தின் பின்னால் ஒதுங்கி கொண்டிருந்தேன். அது மரங்களின் மேல் அடித்து பல மரங்களை சாய்த்தது. புயலடித்து முடியும் வரைக்கும் நான் ஒரு மரத்தின் பின்னால் ஒதுங்கி, சிந்தித்துக் கொண்டிருந்தேன். என் துப்பாக்கியை மரத்தின் மேல் சாய்த்து வைத்திருந்தேன். புயல் அடித்து முடிந்த பின்பு, தேவன் எவ்வளவு அற்புதமானவர் என்று சிந்திந்தேன்.



64. புயலடித்த போது, குளிர் காற்று வீசி, பசுமையான இடங்களின் மேலுள்ள தண்ணீரை உறையச் செய்து, அவை பனித்துளிகளாக தொங்கிக் கொண்டிருந்தன. சூரியன் மேற்கில் மேகங்களை விட்டு வெளியே வந்து போது, மலைப்பிளவின் வழியாக அது எட்டிப் பார்ப்பதை நான் கண்டேன். காண்பதற்கு அது தேவனுடைய கண் போல் இருந்தது.

65. உங்களுக்குத் தெரியுமா, தேவன் எல்லாவிடங்களிலும் இருக்கிறார். அவரைக் காண நீங்கள் நோக்கினால், அவரை எங்கு வேண்டுமானாலும் காணலாம். அவர் அங்கிருப்பார். நீங்கள் அவரை நோக்க வேண்டும். அவர் அங்கிருப்பார். அவர் இப்பொழுது இந்த இடத்தில் இருக்கிறார். நீங்கள் சுற்று முற்றும் நோக்கினால், அவரைக் காண்பீர்கள்.

66. நான் அங்கு நின்று கொண்டு சூரிய அஸ்தமனத்தை கவனித்தேன். என் கரங்களையுயர்த்தி, ''ஓ, மகத்தான யேகோவா

தேவனே, உமது கண்பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது" என்றேன்.



67. அப்பொழுது ஒரு ஆண் கடம்பை மான் இடும் எக்காளம் போன்ற சத்தத்தைக் கேட்டேன். அது புயலில் மந்தையை விட்டு சிதறிச் சென்று விட்டது. அது இப்படி நீண்ட சத்தமிட்டது. அந்த சத்தத்துக்கு பதில் வேறொரு இடத்திலிருந்து வருவதை நான் கேட்டேன். மேலே மலையின் ஒரு பக்கத்திலிருந்து சாம்பல் நிற ஓநாய் ஊளையிட்டது. கீழேயிருந்த அதன் துணை அதற்கு பதிலளித்தது. நான் பள்ளத்தாக்கின் வழியாக ஒரு மலையிலிருந்து மற்ற மலையை நோக்கினபோது அங்கு வானவில் காணப்பட்டது. நான் நோக்கின எல்லாவிடங்களிலும் தேவன் இருந்தார்.

68. என் தாய் பாதி சிகப்பு இந்தியர். செரோக்கி இந்தியர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அவர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய தாய் உபகாரச் சம்பளம் பெற்றிருந்தார்கள். நான் மனந்திரும்பின பிறகும் அந்த சுபாவம் என்னை விட்டுப் போகவில்லை. நான்

காடுகளையும் வெளி இடங்களையும் அதிகமாக விரும்புபவன்.



69. ஓநாய் ஊளையிட்டு அதன் துணை பதிலளிப்பதை நான் கேட்டபோது, என் கன்னங்களின் வழியாகக் கண்ணீர் வழிந்தது. ஆண் கடம்பை மான் தன் மந்தைக்காக கூச்சலிடுவதை நான் கேட்டேன். அது பதிலளித்தது. நான் வானவில்லைக் கண்டபோது, "ஆம், தேவன் அங்கும் இருக்கிறார்" என்றேன். அவர் அல்பா, ஓமெகா. அவர்வர்ணங்கள். வானவில்லிலுள்ள உடன்படிக்கை, அவரைக் காணவேண்டுமென்னும் நோக்கத்துடன்

நீங்கள் தேடினால், அவர் எல்லாவிடங்களிலும் இருக்கிறார்.



70. நான் அதிமகிழ்ச்சி கொண்டு என் கரங்களையுயர்த்தினேன். என் கன்னங்களின் வழியாக கண்ணீர் வழிந்தோடியது. அந்த மரத்தைச் சுற்றிச் சற்றி ஓடினேன். எனக்கு மகிழ்ச்சியான தருணம் உண்டாயிருந்தது. நான் இருந்த இடத்திலிருந்து முப்பது மைல்

தூரம் வரைக்கும் யாருமே இல்லை. நான் மேலும் கீழும் குதித்து உரக்க சத்தமிட்டேன். உண்மையில் அப்பொழுது யாராகிலும் என்னைப் பார்த்திருந்தால், நான் பயித்திக்கார விடுதியிலிருந்து வந்தவன் என்று நினைத்திருப்பார்கள், நான் கவலைப்பட வேயில்லை. நான் நல்ல தருணம் அனுபவித்துக் கொண்டிந்தேன்.



என் தேவனாகிய கர்த்தரை நான் ஆராதித்துக் கொண்டிருந்தேன். மற்றவர் என்ன நினைத்தாலும், நான் கவலை கொள்ளவில்லை. நான் மரத்தை சுற்றி சுற்றி ஓடி, நல்ல தருணம் அனுபவித்துக் கொண்டிருந்தேன். நான் நின்று, ஓநாயின் ஊளையைக் கேட்டு விட்டு, மறுபடியும் மரத்தை சுற்றி சுற்றி ஓடுவதுமாயிருந்தேன்.



71. இப்படி செய்தது ஒன்றை பயமூட்டியது. அங்கு ஒரு சிறு பைன் அணில்

(Pine Squirrel) இருந்தது. ஒக்லஹோமாவிலுள்ள உங்களுக்கு அது என்னவென்று தெரியுமோ தெரியாதோ என்று எனக்குத் தெரியவில்லை - அது இவ்வளவு நீளம் இருக்கும், எப்பொழுதும் சத்தமிடும். அது நீலநிற 'கோட்' (coat)டை அணிந்துள்ள காடுகளின் போலீஸ்காரன்..... அது யாருக்கும் நவலைப்படாமல் அதிக சத்தமிடும். அது ஒரு மரக்கட்டையின் மேல் தாவி 'கீச், கீச், கீச்'' என்று தன்னால் இயன்றவரை மிகுந்த சத்தமிடத் தொடங்கினது. நான், நீ பயப்பட வேண்டிய அவசியமில்லை. நான் என் ஆண்டவரைத் தொழுது கொண்டிருக்கிறேன். உனக்கு அது பிரியமில்லையென்றால், இதைக் கவனி'' என்று நினைத்துக் கொண்டு மறுபடியும் மிகவும் வேகமாக மரத்தைச் சுற்றி ஓடினேன். நான், "என் சிருஷ்டி கர்த்தரே, என் தேவனே, இது மிகவும் அற்புதமல்லவா? நான் மறுபடியும் சுற்றி வரப் போகிறேன்'' என்று சொல்லி இப்படியாக சுற்றி வந்து கொண்டிருந்தேன்.



72. அந்த சிறு அணில் தன் சிறு தலையைப் பக்கவாட்டில் திருப்பி புயல் அடித்துக்கொண்டிருந்த இடத்தை நோக்குவதை நான் கவனித்தேன். நான் அதை பயமூட்டினதாக தெரியவில்லை. வேறொன்று அதை பயமூட்டினது. நான், "நான் பைத்திக்காரத்தனமாக நடந்து கொள்ளவதாக நினைக்க வேண்டாம். நான் அப்படியொன்றும் நடந்து கொள்ளவில்லை. அவர் என்னை ஆசீர்வதிக்கிறார் என்று அறிகிறேன், எனவே நீயும் என்னுடன் சேர்ந்து கொள்" என்றேன்.

73. நான் பார்த்தபோது, புயல்காற்று ஒரு பெரிய கழுகை கீழே விரட்டினதை கண்டேன்.

புயல் அதை கீழே பறந்து வரும்படி செய்திருந்தது... அது கீழே வந்து, ஒருக்கால் தின்று கொண்டிருந்திருக்கும். அதனால் புயலுக்கு மேலே பறந்து செல்ல முடியவில்லை. புயல் அதை புதர்களுக்கு பறந்து வரும்படி செய்தது. அது கீழேயுள்ள புதர்களில் இருந்தது.



74. அதுதான் அந்த அணிலை பயமூட்டியது. அது கழுகை கூர்ந்து கவனித்து, அதை கிழித்தெறிந்து விடுவதுபோல் "கீச், கீச், கீச்'' என்று சத்தமிட்டது. அது எதையும் கிழித்தெறியும் அளவுக்கு பெரிய உருவம் படைத்ததல்ல. அது மரக்கட்டையின் மேல் நின்று தன் வாலை இப்படி சுருட்டிக் கொண்டு “கீச், கீச், கீச், கீச்'' என்று சத்தமிட்டது. நான், ''பயப்படாதே, அது உன்னை ஒன்றும் செய்யாது'' என்று எண்ணினேன்.



75. அந்த பெரிய கழுகு ஒரு மரக்கிளையின் மேல் இப்படி தாவினது. நான், 'ஓ தேவனே, நீர் ஒநாயின் ஊளையில் இருக்கிறீர். காட்டு மிருகங்கள் இடும் சத்தத்தில் இருக்கிறீர். நீர் சூரிய அஸ்தமனத்தில் இருக்கிறீர். நீர் வானவில்லில் இருக்கிறீர். இந்த கழுகை எனக்கு முன்பாக ஏன் வரப் பண்ணினீர்? அந்த கழுகு அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறது? அந்த கழுகில் என்னால் உம்மைக் காண முடியவில்லையே' என்றேன்.

76. நான் அந்த கழுகைக் கவனித்தேன்.... அதன் பெரிய சாம்பல் நிறக்கண்களை நோக்கினேன். அது அந்த அணிலின் மேல் அதிக கவனம் செலுத்தவில்லை. அது என்னையே கவனித்துக் கொண்டிருந்தது. அந்த பெரிய கண்கள் என்னையே கவனித்துக் கொண்டிருந்ததை என்னால் காண முடிந்தது. நான், 'ஆம், அந்த கழுகில் தேவனை நான் காண முடிகிறது. ஏனெனில் அதற்கு பயமேயில்லை. அதற்குள் இருக்கும்

ஏதோ ஒன்று அது பயப்படாதிருக்கும்படி செய்கிறது'' என்று எண்ணினேன்



77. நான் ''அது பயப்படுகிறதா என்று பார்க்கலாம்'' என்று நினைத்து, 'ஏய், என்னால் உன்னை சுட்டு கொன்றுவிட முடியும் தெரியுமா? இதோ பார் என் துப்பாகி. நான் நினைத்தால் உன்னை சுட்டு கொன்றுவிட முடியும்'' என்று கூறினேன்.

78. அது என்னை இப்படி முறைத்து பார்த்துவிட்டு, தன் செட்டைகளை விரிப்பதை கவனித்தேன். நான், 'இப்பொழுது எனக்குப் புரிகிறது. அதுதான் காரணம். தேவன் உனக்கு

இரண்டு செட்டைகளைக் கொடுத்திருக்கிறார், ஆகையால்தான் உனக்கு பயமில்லை. என் துப்பாக்கியை நான் கையில் எடுப்பதற்கு முன்பே நீ அந்த மரத்துக்கு பறந்து சென்று விடுவாய் என்று உனக்குத் தெரியும்'' என்றேன்.



நான், ''உன்னை ஆபத்தினின்று காத்துக் கொள்ள தேவன் உனக்களித்துள்ள உன் செட்டைகளின் மேல் நீ அவ்வளவு நம்பிக்கை

வைத்திருப்பாயானால், தேவனால் அளிக்கப்பட்ட பரிசுத்த ஆவியைக் கொண்டுள்ள சபை இப்படிப்பட்ட காரியங்களிலிருந்து விலகிச் செல்வதற்கு இன்னும் எவ்வளவு அதிகமாக நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்?'' என்று எண்ணினேன். அது செட்டைகளை விரிப்பதை கவனித்தேன். அது உள்ளதை அது உணர்ந்திருக்கும் வரைக்கும்.....



79. ஒருமுறை ஒருவர் என்னிடம், ''சகோ. பிரன்ஹாமே, நீர் தவறு செய்து விடுவீர் என்னும் பயம் உமக்கில்லையா?'' என்று கேட்டார். இல்லை, ஐயா. அவருடைய பிரசன்னம் என்னைச் சுற்றிலும் இருப்பதை நான் உணரும் வரைக்கும், எனக்கு பயமேயில்லை. அதுதான் எனக்கு வேண்டும். அவர் அங்குள்ள வரைக்கும், அவர்தான் அதை செய்கிறார்.

80. நீண்ட நேரமாக நான் கழுகை கவனித்தேன். நான் அதை அதிகமாக நேசிப்பதால், அதற்கு தீங்கு விளைவிக்க மாட்டேன் என்பதை அது அறிந்து கொண்டது, எனவே அதற்கு என் மேல் பயமில்லை. ஆனால் அணில் 'கீச், கீச், கீச்'' என்று இடும் சத்தம் அதற்கு பிடிக்கவில்லை. அதை கேட்டு அது அலுத்துப்போனது. எனவே அது ஒரு பெரிய தாவு, தன் செட்டைகளை இரு முறை அடித்தது. அப்பொழுதுதான் அணில் என்னை ஏன் பார்த்து சத்தமிட்டது என்பதை புரிந்து கொண்டேன். அதன் பிறகு கழுகு தன்

செட்டைகளை அடித்துக் கொள்ளவேயில்லை. அது தன் செட்டைகளை எப்படி விரித்து வைத்துக் கொள்வது என்பதை அறிந்திருந்தது.



ஒவ்வொரு முறை காற்றடிக்கும் போதும், அது உயர சென்றது. காற்றடிக்கும், அது உயர செல்லும். அது ஒரு சிறு புள்ளிபோல் காணப்படும் வரைக்கும், நான் அங்கு நின்று கொண்டு அதை கவனித்துக் கொண்டேயிருந்தேன். நான், 'ஓ தேவனே, அது தான்'' என்று எண்ணினேன். அது ''கீச்,

கீச், கீச்'' என்னும் சத்தம்கேட்டு அலுத்துப்போனது.



81. அது சபைக்கு சபை ஓடி, இதை சேர்வதும் அதை சேர்வதுமாயிருக்கவில்லை - அது பரிசுத்த ஆவியின் வல்லமையில் உங்கள் செட்டைகளை எவ்வாறு விரிப்பது என்பதை அறிந்திருப்பதே. அவர் வரும்

போது நீங்கள் உயர உயர பறப்பீர்கள். ''கீச், கீச் - அற்புதங்களின் நாட்கள் கடந்த விட்டன'' ''பரிசுத்த ஆவி என்று ஒன்று கிடையாது.'' ''நீங்கள் இவ்வாறு செய்வதெல்லாம் தவறு'' ''தெய்வீக சுகமளித்தல் என்பது கிடையாது'' போன்ற சத்தத்திலிருந்து விலகிச்சென்று, அதற்கும் மேலே பறந்து செல்லுங்கள், பரிசுத்த ஆவி உங்கள் மேல் வர அனுமதித்து, இவைகளை விட்டுப்பறந்து செல்லுங்கள். இவை கேட்கக் கூடாத தூரத்துக்கு உயர பறந்து செல்லுங்கள்.



# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 2

## சகோ.பிரன்ஹாம் புயலுக்கு கட்டளையிட்டவுடன் அது மறைந்து போதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: உங்களிலிருக்கிறவர், நவம்பர் 10, 1963, பத்தி எண் 76-151

நான் கொலராடோவின் மலையின்மேல் இருந்தபோது, அங்கு உலர்ந்திருந்தது. வேட்டை பொருள் சொற்பமாக இருந்தது. சகோதரன் வீலரை கர்த்தர் ஆசீர்வதித்து ஒரு நல்ல பரிசு அளித்தார். அதுவே அவர் முதன் முறையாக காட்டில் வேட்டையாடுவது. கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார். அதன் பின்பு நானும் இருபது ஆண்டுகாலமாக எதிர்ப்பார்த்திருந்த ஒரு பெரிய பரிசை சுட்டேன். வெகுகாலமாக நானும் சகோதரன் பாங்க்ஸூம் அதை பின்தொடர்ந்து வந்தோம். என்னுடைய துப்பாக்கியை உஷ்ணப்பிரதேசத்தில் உபயோகித்து விட்டு, குளிர் பிரதேசத்திற்குக் கொண்டு வரும்போது அதன் கண்ணாடி சற்று பெரிதாகி விடுகின்றது. அதன் விளைவாக, குறி சில அங்குலங்கள் தவறிப்போய், மரங்களின் நடுவே இருந்த அந்த மிருகத்தின் மேல், படக்கூடாத இடத்தில் குண்டு

பட்டுவிட்டது. அது சற்று கீழே பாய்ந்திருக்குமானால், ஒரு நொடியில் எவ்வித வலியுமின்றி அந்த மிருகத்தைக் கொன்றிருக்கும். அது சற்று உயரப் பாய்ந்ததால், மிருகம் குதித்துக் கீழே விழுந்தது.

பில்லி அப்பொழுது என்னுடன் இருந்தான். "அந்த குண்டு அதைக் கொன்று விட்டது" என்றான் அவன். நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால் நாங்கள் அங்கு சென்றபோது, அதைக் காணோம். பில்லி, "நீங்கள் மரத்தை தான் சுட்டிருக்கிறீர்கள்" என்றான். அப்பொழுது ஒரு எச்சரிக்கை சிக்னல் (Warning Signal) கொடுக்கப்பட்டது. நாங்கள் இருந்த இடத்திற்கு சற்று உயரத்தில் ஏறக்குறைய நூறு பேர் இருந்தனர். சகோதரன் பாமரும் மற்றவர்களும் அதற்கு சாட்சிகள். சகோதரன் ஈவான்ஸ் அங்கிருந்தார். சகோதரன் வெல்ஷ் ஈவான்ஸூம் அவருடைய மகன் ரானியும் (சற்று முன்பு அவனை நான் கூட்டத்தில் கூப்பிட்டேன்) 'பசு பாளையம்' (Cow Camp) என்று அழைக்கும் இடத்திற்கு அநேகர் சென்றிருந்தனர். அங்கு மாடு மேய்ப்பவர்கள் தங்கி, சவாரி

செய்து, தங்கள் மாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைப்பார்கள். நான் கூட முன்பு அப்பாளையத்தில் தங்கியிருந்து, மாடுகளை ஓட்டி, ஒருபுறம் ஒதுக்கி வைப்பதுண்டு.

அங்கு ஏறக்குறைய நூறுபேர் இருந்தனர். அங்கு 'பனிப்புயல்' (Blizzard) உண்டாகும் என்று அறிவிக்கப்பட்டு 'எச்சரிக்கை சிக்னல்' கொடுக்கப்பட்டதால், அங்கிருந்து உடனே புறப்பட்டுச் சென்று விட வேண்டுமென்று எல்லோருக்கும் தெரியும். எனவே, சகோதரன் பாமரும் மற்றவர்களும் உடனே புறப்பட்டு சென்று விட்டனர். ஏனெனில் அவர்கள் கார் மூவகை வேகத்தில் மாத்திரம் செல்லக்கூடியது (three speed transmission) அவர்கள் உடனே புறப்பட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. வானிலை மோசமானால், வாரக்கணக்காக அங்கேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். 'பனிப்புயல் வரப்போகின்றது' என்று வானொலியும் அறிவிக்கின்றன என்று சொல்லி, எங்களுக்கு மேலே இருந்தவர்களும், சுற்றிலும் இருந்தவர்களும் கூட்டம் கூட்டமாகச்

சென்றுவிட்டனர். அங்கிருந்து புறப்பட்டு சென்று விட வேண்டும் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

ஆனால் என்னுடன் கூட இருந்த மற்ற சகோதரருக்கு, மானைச் சுடுவதற்கு இரண்டு அனுமதிச் சீட்டுகள் இருந்தன. அவர்களுக்கு சென்றுவிட விருப்பமில்லை, சரி, அப்படியானால் நாம் தங்கலாம் என்று அவர்களிடம சொன்னேன். ஆனால் ஆறு நாட்களுக்குக் பிறகு ஒரு கூட்டம் டூசானில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதற்கு நான் போக வேண்டும்.

எனக்கு விவாகமாகி இருபத்திரண்டு ஆண்டுகளாகின்றன. இருபது ஆண்டுகளாக, ஒவ்வொரு விவாக நாளன்றும், நான் மலைக்குச் சென்றிருக்கிறேன். அங்கு ஒரு சிறிய ஸ்தலம் உள்ளது. நான் அங்கு சென்று ஜெபிப்பதுண்டு. என் மனைவியை நான் ஏற்றுக் கொண்ட ஸ்தலம் அதுவே.

என் தேன் நிலவன்று, வேட்டைப் பயணம் செல்ல என்னிடம் பணமில்லை. என் மனைவியை தேன் நிலவுக்காக வேட்டைக்கு கூட்டிச் சென்றேன். அங்கிருந்த ஓரிடத்தையடைய, சுற்றிலுமுள்ள மரங்களைக்

காலிசெய்ய என் மனைவிக்கு உதவி செய்தேன். அதன் விளைவாக ஒரு சிறு இடம் எனக்கு அங்கு கிடைத்தது. அங்கு தான் எங்கள் தேன்நிலவை கழித்தோம். ஒவ்வொரு விவாக நாளன்றும், அந்த இடத்திற்கு நான் செல்லும் போது, என் மனைவியை நினைவுகூருவேன். அக்டோபர் 23ம் தேதியன்று அந்த சீசன் (Season) தொடங்கும். இருபது ஆண்டுகளாக என் விவாக நாளை என் வீட்டில் கழித்ததில்லை; அந்த இடத்தில் தான் கழித்திருக்கிறேன்.

அன்று என் விவாக நாளாக இருந்தது. சகோதரன் மான்... நான் அவர்களிடம், "நீங்கள் இங்கு இருக்க விரும்பினால் ஒரு மாதம் இங்கு தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்" என்றேன். ஏனெனில் ஒரே இரவில் இருபது அடி உயரத்திற்குப் பனி பெய்வதை, பனிப்புயலின் போது நான் கண்டிருக்கிறேன். அங்கு ஓரிடம் உலர்ந்து காணப்படும். ஆனால் அடுத்த நாள் காலைக்குள், அங்கு தங்குவதற்கென அடிக்கப்பட்ட கூடாரத்தின் உச்சிவரை, பனிபெய்திருக்கும். பனி உருகும் வரை அங்கேயே தங்க வேண்டி நேரிடும். அந்த இடம்

காட்டில் பதினைந்து அல்லது இருபது மைல் உள்ளே இருக்கும். ஆனால் ஆபத்தான நிலை ஏற்படுமானால், அவர்கள் ஹெலிகாப்டரை அனுப்பி உங்களைக் காப்பாற்றுவார்கள். சாதாரணமாக பனியினால் யாரும் மடிந்து போவதில்லை. பனி உருகும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டும்.

பனிப்புயலைக் குறித்த முன்னறிவிப்பைக் கேட்ட மாத்திரத்தில், நாங்கள் தரையில் அமர்ந்தோம். நான், "ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள். இங்கு நீங்கள் தங்க விரும்பினால், நானும் உங்களுடன் தங்குவேன், நான் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டு, அவளுக்கு விவாக நாள் வாழ்த்து கூறிவிடுவேன். இங்கு நாம் தங்க வேண்டுமானால் திண்பண்டம் வாங்கவேண்டும்" என்றேன். எங்களிடம் இருந்த ரொட்டி தீர்ந்துவிட்டது. 'பான்கேக்' (pancake) தின்பண்டத்தை நான் கண்ணால் காணக்கூட விரும்பவில்லை. ஏனெனில் கனடாவில் இருபத்தொன்று நாட்களாக அதையே தின்றதால், சலித்துப் போய்விட்டது, எனவே நான் ரொட்டி வாங்கவேண்டுமென்று விரும்பினேன்.

அவர்கள் தங்கலாமென்று தீர்மானித்தனர். சகோதரன் மானும் நானும் கீழே சென்று மளிகை சாமான்கள் வாங்கினோம். நான் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டபோது, யாரும் பேசவில்லை... மளிகை சாமான்கள் வாங்கி அதைக் கட்ட ஒரு மணி நேரம் பிடித்தது. அதுவரை நான் காத்திருந்து, மீண்டும் என் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டேன். அப்பொழுதும் என் மனைவி பேசவில்லை, நான் சகோதரி ஈவான்ஸை தொலைபேசியில் கூப்பிட்டேன். அவர்கள் இப்பொழுது இங்கிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆம், சகோதரன், சகோதரி ஈவான்ஸ் இருவரும் இங்குள்ளனர்.

நான் சகோதரி ஈவான்ஸை தொலைபேசியில் கூப்பிட்டேன். அவர்கள், "நான் சகோதரி பிரான்ஹாமைத் தொலைபேசியில் கூப்பிட்டு, உங்கள் சார்பாக விவாக நாள் வாழ்த்து தெரிவித்து விடுகிறேன்" என்றார்கள். என் மனைவி அப்பொழுது குழந்தைகளுக்கு மளிகை சாமான்கள் வாங்க கடைக்குச் சென்றிருந்தாள்.

நாங்கள் திரும்பி மலைக்கு வந்தோம். அடுத்த நாள் காலையில் வானத்தில் மேகங்கள் மாத்திரமேயிருந்தன. மழை காலத்தில் மழை பெய்யாததால் எல்லாமே உலர்ந்து கிடந்தது. உலர்ந்த நிலையின் காரணமாக, வேட்டை சீசனை அவர்கள் இன்னும் சில நாட்கள் நீடித்து வைக்கவேண்டியிருந்தது.

அன்று காலை நான் சகோதரரிடம், ''முதல் துளி மழை, அல்லது முதல் பனி, அல்லது கல் மழை **(Sleet),** எது விழுந்தாலும், உங்களால் கூடுமானவரை துரிதமாக முகாமிற்குச் சென்று விடுங்கள். ஏனெனில் பதினைந்தே நிமிடங்களில் உங்கள் கைகளையும் கூட நீங்கள் காணமுடியாத அளவிற்குப் பனிபெய்துவிடும். பாருங்கள்? அது சுழன்று சுழன்று அடிக்கும். தேசத்தைப் பற்றி எவ்வளவு நன்றாக நீங்கள் அறிந்திருந்த போதிலும் திசைகெட்டு விடுவீர்கள். எனவே, முகாமிலேயே தங்கியிருங்கள். இல்லையேல், மடிந்து போவீர்கள், ஏனெனில் சில நேரங்களில் கல்மழை வேகமாகப் பெய்து காற்றடிக்கும்போது, உங்களால் மூச்சுவிடவும் முடியாது. அங்கேயே நீங்கள் இறந்து போக நேரிடும். எனவே கல்மழை

பெய்யத் தொடங்கினவுடனே, உங்களால் முடிந்தவரை, எங்கிருந்தாலும் துரிதமாக முகாமிற்குச் சென்று விடுங்கள்'' என்றேன்.

“நீங்கள் மேலே சென்று கணவாயில் உட்காருங்கள். நான் இன்னும் உயரச்சென்று மலையிலிருந்து கல்லை உருட்டி, மான்களைப் பயப்படுத்தி கீழே ஓட்டி விடுகிறேன். உங்களுக்கு வேண்டிய மானை நீங்கள் சுடுவதற்காக தெரிந்து கொள்ளுங்கள்'' என்றேன்.

எனவே நான் மேலேறிச் செல்லத் தொடங்கினேன். ‘சாடில்’ (Saddle) என்று நாங்கள் வழக்கமாக அழைக்கும் இடத்தை நான் அடைந்தேன். அந்த இடத்தைக் கடந்துதான் நாங்கள் ‘க்வேக்கர் நாப்’ (Quaker knob) என்னும் இடத்திற்குப் போக வேண்டும். அது மிகவும் உயரமுள்ள இடம் அந்த ‘சாடில்’லை நான் ஏறக்குறைய அடைந்து விட்ட தருணம், மேகங்கள் கருமையாகத் தொடங்கின. மேலே வாகனம் எதுவும், மாடு மேய்ப்பவர் எவரும் இல்லை. சில நிமிடங்களுக்குள் மழை பெய்ய தொடங்கியது. என் துப்பாக்கியை ‘கோட்’ டுக்குள் மறைத்துக்கொண்டு, தூரப்பார்வை கண்ணாடி

மங்காதபடிக்கும், துப்பாக்கியின் குழாய் நனையாதபடியும் செய்தேன். ஒரு கரடியை சந்திக்க நேர்ந்தால், என்ன செய்வது என்று நினைத்துக்கொண்டே, தூரப்பார்வை கண்ணாடியை இப்படிப் பிடித்துக்கொண்டு, சற்று மரத்தினடியில் அமர்ந்தேன். அங்கு, "தேவனாகிய கர்த்தாவே, நீரே மகத்தான யேகோவா. உம்மை நான் நேசிக்கிறேன்" என்று சொல்லி ஜெபம் செய்தேன்.

எனக்கு எத்தனை அனுபவங்கள் உண்டாயிருக்கின்றன! சகோதரன் பாமருக்கும் மற்ற சகோதரருக்கும், கழுகு இளைப்பாறும் ஸ்தலத்தையும், அவ்விடமிருந்து அது உயர பறந்து செல்வதையும் நான் காண்பித்துக் கொடுத்தேன். அங்கு தான் இவையாவும் சம்பவித்தது. அங்கு இருப்பது என் மனத்திற்குகந்த செயலாகும். மலைகளின் மேல் ஆண்டவருடன் எத்தனையோ மகத்தான அனுபங்களைப் பெற்றிருக்கிறேன். எனவே அங்கு சென்றால் அவரைக் காணாமலிருக்கவே முடியாது. அவர் எங்கும் இருக்கிறார்.

அங்கு அமர்ந்தேன். அப்பொழுது சிறு கல்மழை பெய்யத் தொடங்கினது. சுழல் காற்று

வீசத் தொடங்கினது. நான், “எனக்கு கீழே போக நன்றாக வழி தெரிந்தால், இப்பொழுதே கீழே இறங்கி விடுவது நல்லது” என்று எண்ணினேன்.

நான் கீழே பார்த்தபோது, அடிபாகம் எதுவும் தெரியவில்லை. மேகங்கள் சுழன்று கொண்டிருப்பதையும், கல்மழை பொழிவது மாத்திரமே காணமுடிந்தது. அந்தப் பனிப்புயல் தொடங்கிவிட்டது. “பனிப்புயல் வரப்போகின்றது” என்று அநேக நாட்களாக அறிவிக்கப்பட்ட வானிலை முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டது.

கனடாவைச் சேர்ந்த சகோதரன் டாம் சிம்சன் இப்பொழுது இங்கிருக்கிறார். அவர் வானிலை முன்னறிவிப்பைக் கேட்டார். அந்த பாகத்திற்குச் செல்ல வேண்டாமென்று அவருக்கு அறிவுரை கூறப்பட்டது. ஏனெனில் வானிலை முன்னறிவிப்பு, “அங்கு பனிப்புயல் தோன்றும்” என்று அறிவித்தது. சகோதரன் டாம், இங்கே இருக்கிறீர்களா? இங்கு தான் அமர்ந்திருக்கிறார். பனிப்புயல் வந்து கொண்டிருந்தது. எல்லோரும் அதற்காக ஆயத்தமானார்கள்.

என் துப்பாக்கியை இப்படி என் சிகப்பு சட்டைக்குள் புகுத்திக்கொண்டு, மலையிலிருந்து

கீழே இறங்கி வரத்தொடங்கினேன். ‘சாடில்’லிருந்து நான் அரை மைல்தூரம் வந்திருப்பேன். ஓ, அந்த பெரிய பனித்துளிகள் பெய்யத் தொடங்கின. காற்றும் மலையின் மேல் சுழன்று வீசியது. மலையடிவாரத்தை என்னால் காண முடியவில்லை. எனக்கு முன்னால் இருபது அல்லது முப்பது அடி தூரமே காணமுடிந்தது. ‘ஹாக்பாக்’ (Hogback) என்று நாங்கள் அழைக்கும் அந்த சிறிய முகடு (ridge) வரைக்கும் எப்படி வருவதென்று எனக்குத் தெரியும். அப்படியே சிறிய ஓடைக்கு (creek) வந்து, அதைப்பின் தொடர்ந்து வரவும், அது மோசமான நிலையடைந்தால் அங்கிருந்து எங்கு செல்ல வேண்டுமென்றும் எனக்குத் தெரியும்.

ஆகவே நான் கீழிறங்கி வந்தேன். பாதி வழிவந்தபோது, ஏதோ ஒன்று என்னிடம் – இப்பொழுது நான் உங்களிடம் எவ்வளவு தெளிவாக பேசுகின்றேனோ அவ்வளவு தெளிவாக – “நில்! வந்த வழியே பின்னால் போ!” என்றது.

“என்ன இவ்விதம் நினைக்கிறேன்! ஒருக்கால் அது என் சொந்த

சிந்தனையாயிருக்கலாம்!'' என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் என்னால் ஒரு அடிகூட முன் எடுத்து வைக்கமுடியவில்லை.

டேவிட் அன்று காலை எனக்கு சான்ட்விச் (sandwich) செய்து கொடுத்திருந்தான். ஒரு முறை அவன் தன் தகப்பனாருக்கு வெங்காயமும் தேனும் போட்டு சான்ட்விச் ஒன்று செய்து கொடுத்தான், அதுபோன்று எனக்கும் ஒரு சான்ட்விச் ஒன்று செய்து கொடுக்க விரும்பினான் போலும்! (அது மாத்திரமே எங்களிடம் இருந்தது). பலோனி (Baloney) என்னும் உணவையும் அவன் செய்து கொடுத்து, காகிதத்தில் சுற்றிக்கொடுத்தான். அதை நான் சட்டைப் பையில் வைத்திருந்தேன். அது நனைந்துவிட்டிருந்தது. ''சற்று நின்று, இதை புசித்துவிடுகிறேன். அப்பொழுது சரியாகிவிடும்'' என்று நினைத்துக்கொண்டே, சான்ட்விச்சை சட்டைப் பையிலிருந்து எடுத்து தின்னத் தொடங்கினேன். அப்பொழுது சுமார் 10 மணியிருக்கும் ''அதை சாப்பிட்டால் சரியாகிவிடுவேன்'' என்று எண்ணியவாறு முன்னால் செல்லத் தொடங்கினேன். ஆனால்

ஏதோ ஒன்று என்னிடம், "நீ வந்த இடத்திற்கே திரும்பிச் செல்" என்று கூறினது.

"அந்த புயலின் வழியாகத் திரும்பிச் செல்வதா?" என்று எண்ணினேன். இன்னும் அரைமைல் தூரம் மலையின்மேல் இருண்ட காட்டின் வழியாகச் செல்லவேண்டும். இங்கிருந்து ஆர்கன் (organ) இசைக்கருவி இருக்கும் தூரம் வரைக்கும்கூட என்னால் காண முடியவில்லை. எனக்கும் வயதாகிக் கொண்டே போகின்றது. **முப்பத்து மூன்று ஆண்டு காலமாக நான் கிறிஸ்தவனாக இருந்து வந்துள்ளேன். ஆண்டவர் கூறுவது எவ்வளவு பைத்தியகாரத்தனமாகத் தோன்றினாலும், அதை முதலில் செய்! ஆண்டவர் சொன்னபடியே செய்!**

நான் திரும்பி 'சாடில்'லுக்குச் சென்றேன், கல்மழை அதிகமாகிக் கொண்டே வந்தது. இருளும் அதிகமாகச் சூழ்ந்தது. நான் சற்று அமர்ந்து, என் சட்டையை தூரப்பார்வைக் கண்ணாடியின் மேல் போட்டேன். "நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?" என்று வியந்தேன். "நான் ஏன் இங்கு மறுபடியும் வரவேண்டும்?"

நான் சில நிமிடங்கள் காத்திருந்தேன். நான் எழுந்தபோது ஒரு சத்தம் மிகத்தெளிவாக என்னிடம், “நானே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர்! நானே காற்றையும் மழையையும் படைத்தேன்” என்றது. நான் என் தொப்பியைக் கழற்றினேன்.

“மகத்தான யேகோவாவே, அது நீர்தானா?” என்று கேட்டேன்.

அவர், “கடலின்மேல் காற்றடிக்காதபடிக்கு அதட்டியவர் நானே! அலைகள் தாழும்படி செய்தவர் நானே! வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் நானே! அணில்கள் தோன்ற நீ கட்டளையிட வேண்டுமென்று உன்னிடம் கூறியவர் நானல்லவா? நீ கட்டளையிட்ட மாத்திரத்தில் அவை சிருஷ்டிக்கப்பட்டதல்லவா? நானே தேவன்” என்றார்.

**ஒரு சத்தம் உங்களிடம் பேசினால், அது கூறுவதை வேத வாக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அது வேதவாக்கியங்களுடன் பொருந்தாவிட்டால், அதை விட்டுவிடுங்கள். அது எவ்வளவு தெளிவாக இருந்தாலும், அதை விட்டு அகன்று விடுங்கள்.**

நான், "ஆம் ஆண்டவரே" என்றேன்.

அவர், "அந்தப் புயல் காற்றுக்குக் கட்டளையிடு. அது மறைந்து விடும்" என்றார். இந்த வேதாகமம் எனக்கு முன்பாக இருக்கிறது. எனது ஜீவனே அதில்தான் இருக்கிறது.

நான் எழுந்து, "ஆண்டவரே, உமது சத்தத்தை நான் ஒரு போதும் சந்தேகிக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு "மேகங்களே, பனிக்கட்டியே, மழையே, கல்மழையே! நீங்கள் வந்திருப்பது எனக்கு விருப்பமில்லை. உங்கள் இடங்களுக்குச் செல்லும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன். எங்கள் வேட்டைப் பயணம் முடிவடைந்து, சகோதரர்களை நான் பிரிந்து செல்லும்வரை, சூரியன் உடனே தோன்றி, நான்கு நாட்கள் தோன்றி, நான்கு நாட்கள் சூரிய வெளிச்சம் உண்டாக வேண்டும்" என்று கூறினேன்.

காற்று, "ஊ ஊ ஊ ஊ ஷ்" என்று வீசிக் கொண்டிருந்தது. அது 'ஊஷ்' என்று சத்தமிட்டுக் கொண்டே சென்று, பின்னர், 'வ்யூ, வ்யூ' என்ற விதமாய் சப்தம் குறைந்து, முடிவில் நின்று போயிற்று.

நான் அசையாமல் நின்றேன். அங்கிருந்த என் சகோதரர்கள் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று வியந்தனர். கல் மழையும், மழையும் நின்று போயின. மலைவழியாக காற்று சுழன்று கொண்டே வந்து, மேகங்களைத் தூக்கிச் சென்றது. அவை நாலா திசைகளிலும் சிதறிச் சென்றன. சில நிமிடங்களில் சூரிய வெளிச்சம் நன்கு பிரகாசித்தது, வெப்பமானது, நான் கூறுவது உண்மை! அது உண்மையென தேவனறிவார்.

என் தொப்பியைக் கழற்றின நிலையில் நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். என் மெய் சிலிர்த்தது.

நான், "சிருஷ்டி கர்த்தருடைய கரங்களில் எல்லாமே உள்ளது. அவர் என்னிடம் என்ன கூறினார்?" என்று சிந்திக்கலானேன்.

என் துப்பாக்கியைக் கையிலெடுத்துக்கொண்டு, தூரப்பார்வை கண்ணாடியை துடைத்துக்கொண்டு, மலையிலிருந்து கீழே இறங்கிச் சென்றேன். அப்பொழுது ஏதோ ஒன்று, "இந்த வனாந்தரத்தில் என்னுடன் கூட நீ ஏன் நடக்கக்கூடாது?" என்று கேட்டது.




நான், "ஆம், ஆண்டவரே, என் மனப்பூர்வமாக அப்படிச் செய்வேன். உம்முடன் கூட நடப்பதென்பது இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் விட மிகவும் மகத்துவமானது" என்றேன். எனவே, என் துப்பாக்கியைத் தோளில் தொங்க வைத்துக் கொண்டு, காட்டின் வழியாக நடந்து சென்றேன் (அங்கிருந்த மரங்களின் மேல்

கோடாரி இது வரை பட்டதேயில்லை. அவை யாவும் புதிதாக வளர்ந்த மரங்கள்)

நான் அவ்விதம் நடந்து சென்று கொண்டிருந்த போது, "அந்த இடத்திற்கு சென்றால் என்ன? நேற்று எங்கள் விவாக நாள். என் மனைவி மேடாவைச் கௌரப்படுத்தும்விதமாக, அவளைச் சிந்தனையில் கொண்டு, சில நிமிடங்கள் அந்த இடத்தில் கழிக்கலாமே' என்னும் உணர்வு உண்டானது. "அந்த இடம் வரை நான் நடந்துசென்று, எங்கள் விவாக நாளை நினைவுகூர்ந்து அந்த கறுத்த மரங்களின் மற்ற பாகத்தில் நடந்து, 'கோரல் உச்சி' (Corral Peak)யில் நடந்து, மற்ற வழியாக சென்று, இவ்விதமாக நடந்து சென்று, குதூகலிப்பேன்" என்று எண்ணினேன்.

அப்பொழுது நான், "பிதாவே, நீர் என்னுடன் நடந்து வருகிறீர் என்று நானறிவேன். தேவனைக் காட்டிலும் நான் கூட நடந்து செல்லக்கூடிய மகத்தானவர் வேறெவருமில்லை" என்றேன். நான் மலைகளை விட்டு கீழே இறங்கி வந்த பிறகும் சூரியவெளிச்சம் உண்டாயிருந்தது.

பெட்ரோல் நிரப்பும் ஸ்தலங்களில் நான் காரை நிறுத்தினேன். நான்கு நாட்கள் கழித்தும், அந்த பாகத்தில் மழை பெய்யவேயில்லை. "எவ்வளவு அருமையான நாள்! என்று ஒவ்வொரு நாளும் எண்ணினேன். தினந்தோறும் சூரியன் பிரகாசித்தது. அது சரியா சகோதரர்களே? (சகோதரர்கள் ஆமென் என்கின்றனர் – பதிப்பாசிரியர்) பாருங்கள்? வானத்தில் சிறிதளவு மேகம்கூட இல்லை.

நான் பெட்ரோல் நிரப்பும் ஸ்தலத்தையடைந்து, அந்த ஆளிடம், "மிகவும் அருமையான நாள் அல்லவா?" என்றேன்.

"ஆம்" என்றார்.

"பயங்கர வெப்பமான நாளல்லவா?" என்றேன்.

அதற்கு அவர், "உங்களுக்குத் தெரியுமா? ஒரு வினோதமான காரியம் சம்பவித்தது. பயங்கரப் பனிப்புயல் வரப்போகின்றது என்று அவர்கள் முன்னறிவித்தனர். ஆனால் திடீரென்று அது நின்று விட்டது" என்றார்.

நான் நியூ மெக்சிகோவை அடைந்தேன். நானும் என் மகனும் ஒரு பொருளை வாங்க அங்கு ஒரு சிறிய கடைக்குச் சென்றோம். நான் அங்கிருந்தவரிடம், "அருமையான நாளல்லவா?" என்றேன்.

"ஆம்" என்றார் அவர்.

"மிகவும் உலர்ந்து காணப்படுகின்றது" என்றேன்.

"ஆம், சில நாட்களாகவே உலர்ந்துள்ளது" என்றார்.

"நீங்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர்களா?" என்று கேட்டேன்.

அவர், "இல்லை! நான் விஸ்கான்சினை (Wisconsin) சேர்ந்தவன். ஆனால் இருபது ஆண்டுகாலமாக இங்கேயே வாழ்ந்து வருகிறேன். எனவே, இதையே என் சொந்த இடமாக பாவிக்கலாம்" என்றார்.

"அப்படியானால் இங்கு நீங்கள் குடி வந்திருக்கிறீர்கள். மிகவும் தூசி படிந்திருந்ததாகக் காணப்படுகின்றதே" என்றேன்.

அதற்கு அவர், "ஒரு விசித்திரமான சம்பவம் நடந்தது. பனிப்புயல் வருமென்றும், அதிக பனிப்பெய்யும் என்றும் வானிலை முன்னறிவிப்பு உண்டாயிருந்தது. உண்மையில் அந்தப் பனிப்புயல் தொடங்கியது. ஆனால் அது நின்றுவிட்டது" என்றார்.

"அப்படியா?" என்றேன்.

நான் வீட்டையடைந்தேன். பனிப்புயல் வரப்போவதாகவும் அந்த வழியே போகக்கூடாதென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சகோதரன் டாம் கூறினார். அவர் நாட்டைக் கடந்து வந்தார். ஆனால் ஒரு துளி மழையோ அல்லது வேறெதுவோ உண்டாயிருக்கவில்லை. அவர் எப்பொழுதும் போலவே இன்றும் தேவனாயிருக்கிறார். பாருங்கள்?

நான் மலையில் நடந்துசென்று கொண்டேயிருந்தேன்... ஒலி நாடாவின் இந்தப் பாகத்தை என் மனைவி கேட்க மாட்டாள் என்று நம்புகிறேன். பாருங்கள்? உங்களிடம் ஒன்றைக் கூறப்போகின்றேன். நான் உங்களிடம் உண்மையையே கூறுகின்றேன். அது தான்

சரியான முறையாகும். ஒவ்வொரு விவாக நாளன்றும் நான் இத்தகைய வேட்டைப் பயணம் செல்வதைக் குறித்து என் மனைவி ஏன் முறுமுறுப்பதில்லையென்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. நான் என்ன நினைத்தேன் தெரியுமா? விவாக நாளன்று அநேகர் வீட்டிற்கு வருவார்கள். நான் பயந்த சுபாவமுடையவன் (nervous) என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? எப்பொழுதும் நான் தேவனைக் குறித்தும், வேதத்தைக் குறித்துமே பேச விரும்புகிறேன். எனவே, சில நாட்கள் நான் வேட்டைக்குச் சென்றால் அவளுக்குத் தொல்லை சற்று நீங்கியிருக்கும் என்று நினைக்கிறாளோ என்னமோ! என்று எண்ணினேன்.

அதற்காக அவளிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன். இத்தகைய சிந்தை என்னில் எழுந்ததற்காக நான் தேவனிடம் மன்னிப்பு கோருகிறேன். ஏனெனில் இந்த எண்ணம் என் மனதில் எழுந்த வண்ணமாக இருந்தது. அவள் வீட்டுவேலை அதிகம் செய்பவள். சமையலறையிலோ அல்லது வேறெங்காவது

அவள் சதா வேலை செய்து கொண்டேயிருப்பாள்.

அவளை அறிந்துள்ள உங்களுக்கு துணி சலவை செய்யும் இயந்திரத்தை அவள் எப்பொழுதும் இயக்கிக் கொண்டேயிருப்பாள் என்பது தெரியும். அவள் வேலை செய்துகொண்டிருக்கும்போது நான் அவளிடம், "துணி சலவை செய்வதை நிறுத்தி விட்டு வந்து என்னுடன் பேசிக்கொண்டிரு. நான் உன்னை நேசிக்கிறேன். நீயும் என்னை நேசிக்கிறாய் என்று நீ கூற விரும்புகிறேன்" என்பேன்.

"உங்களை நான் நேசிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்" என்று அவள் கூறிவிட்டு, மறுபடியும் துணி சலவை செய்யும்பணியில் மும்முரமாக ஈடுபடுவாள்.

"அதை நிறுத்திவிட்டு, என்னுடன் உட்கார்ந்து பேசு" என்பேன்.

"ஓ, பில் (Bill), எனக்கு எத்தனையோ வேலையிருக்கிறது" என்பாள்.

"நான் வேட்டைக்குச் சென்றால் வேலை செய்வதற்கு அவளுக்கு அதிக நேரம்

கிடைக்குமென்று எண்ணுகிறாள் போலும்" என்று நினைத்துக் கொண்டேன். வேதாகமம் எனக்கு முன்னால் இருக்கிறது. நான் தேவனுடைய வார்த்தைக்கு முன்னால் உள்ளதை நீங்கள் காண்கிறீர்கள். நான் மலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஏதோ ஒன்று என்னில் சம்பவித்தது.

அப்பொழுது தேன் நிலவுக்கு என் மனைவியை அங்கு அழைத்து சென்ற சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது. அவள் கறுப்பு மயிர் கொண்டவளாய், பழுப்பு நிறக் கண்கள் உடையவளாய் அப்பொழுது மிகவும் அழகாக இருந்தாள். அந்த மரங்களைக் கடந்து செல்வதற்காக சில நேரங்களில் அவளைத் தூக்கிவிட்டு, இப்படியாக கரடிவேட்டையாடும் இடத்தையடைய அவளுக்கு உதவி செய்தேன். நான் கரடியை வேட்டையாடிக் கொல்வதை அவளுக்குக் காண்பிக்க விரும்பினேன். அவள் அப்பொழுது என் 'மாட்டுக்காரப் பையனின் காலணியை' (Cow boy boots) போட்டுக் கொண்டிருந்தாள். (அது இருபத்திரண்டு அல்லது இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த

சம்பவம். எங்களுக்கு 1941ல் விவாகம் நடந்தது) மரங்களைக் கடப்பதற்கென, அவளைத் தூக்கிச் சென்றேன்.

“இப்பொழுது பாவம்! அவள் என் தொல்லைகளைப் பொறுத்துக் கொள்கிறாள். அவளுடைய தலைமயிர் நரைத்துவிட்டது என்றெல்லாம் எண்ணியவாறே நடந்து சென்று கொண்டிருந்தேன். (சகோதரன் பிரான்ஹாம் கனைக்கிறார் - ஆசி). சில நாட்களாக நான் சவரம் செய்யவில்லை. எனக்கும் நரைத்துவிட்டதென்று அப்பொழுது நான் உணர்ந்தேன். ஏனெனில் நரைத்த தாடி வளர்ந்திருந்தது. அப்பொழுது நான், “கிழவனே, உன் காலமும் முடிவடையப் போகின்றது. நீ ஏதாவது செய்ய நினைத்திருந்தால், அதை துரிதமாகச் செய். உனக்கும் வயதாகிக் கொண்டே போகின்றது” என்று உள்ளத்தில் எண்ணினேன்.

அவ்விதம் நான் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஏதோ ஒன்று சம்பவித்தது. திடீரென்று (என் நடத்தையிலும் என் கொள்கையிலும்) நான் ஒரு வாலிபனைப்போல் மாறினேன். என்னை ஒரு வாலிபனாக பாவித்துக்

கொண்டேன். நான் தலைகுனிந்த வண்ணம் இருந்தேன். நிமிர்ந்து பார்த்தபோது, என் மனைவி கரங்களை விரித்தபடி எனக்கு முன்பாக நின்று கொண்டிருந்தாள். என் முகத்தை தடவிக் கொண்டே, "மேடா, நீயா அது, அன்பே?" என்று கேட்டேன்.

நான் இங்குமங்கும் பார்த்தேன். "என்ன நேர்ந்தது?" என்று நினைத்துக் கொண்டேன். அப்பொழுது தான் நான் அவருடன் கூட நடந்து கொண்டிருக்கிறேன் என்னும் உணர்வு வந்தது. அதன் பின்பு என் உருவம் மாறினது. நான் மறுபடியும் கிழவனானேன். எனக்கு நேர்ந்த தரிசனம் என்னை விட்டகன்றது.

நான் நின்று, என் தொப்பியைக் கழற்றி என் இருதயத்தின் மேல் வைத்துக்கொண்டு, "இயேசுவே, என் இருதயம் எத்தனையோ ஆண்டு காலமாக பாரமாயிருந்து வருகிறது. அவ்விதம் பாராமாயுள்ளது என்று நான் உமக்குச் சொல்லத் தேவையில்லை. நான் மனஸ்தாபப்பட்டேன், எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நான் செய்து கொண்டு வருகிறேன். இருப்பினும் ஏன் இந்தப் பாரம்

என்னை விட்டு அகலவில்லை?'' என்று கேட்டேன்.

நான் இவ்விதம் நடந்து சென்று, எனக்கு முன்னால் முப்பது அல்லது நாற்பது கெஜம் தூரமுள்ள குன்றையடைந்து அதன் மேலேறிச் சென்றேன். நான் மிகவும் பலவீனமாயிருப்பது போன்ற ஒரு உணர்ச்சி எனக்குண்டானது. நான் குன்றின் உச்சியையடைந்த போது, மிகவும் பலவீனமடைந்து, தள்ளாட ஆரம்பித்தேன். நான் தொப்பியைப் போட்டுக் கொண்டு என் தலையை அங்கிருந்த புன்னை மரம் ஒன்றின்மேல் சாய்த்தேன். அவ்விதம் நான் நின்று கொண்டிருந்த போது, சூரிய வெப்பம் என் முதுகின்மேல் விழுந்தது. ‘‘அந்த மழையையும் காற்றையும் போக்கின தேவன்'' என்று எண்ணிக் கொண்டேயிருந்தேன்.

அப்பொழுது ‘பட், பட்' என்று ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

‘‘அது என்னவாயிருக்கும்? தண்ணீரெல்லாம் உலர்ந்து விட்டதே!'' என்று எண்ணிக் கொண்டே கீழே நோக்கினபோது, என் கண்ணீர் என் நரைத்த தாடி வழியாய் வழிந்தோடி, தேவன்

உலர வைத்திருந்த அந்த உலர்ந்த இலைகளின் மீது விழுவதைக் கண்டேன். நான் மரத்தின் மேல் தலை சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன். என் கரங்கள் கீழே தொங்கிக் கொண்டிருந்தன. என் ஒரு கை துப்பாக்கி கட்டியிருக்கும் கயிற்றுக்குள் (Sling) இவ்விதம் போடப்பட்டிருந்தது. நான் அங்கு நின்று கொண்டே அழுதேன்.

நான், "ஆண்டவரே, உமது ஊழியக்காரனாயிருக்க நான் பாத்திரவானல்ல. நான் அநேக தவறுகள் இழைத்திருக்கிறேன். வேண்டுமென்று நான் தவறுகள் செய்யவில்லை. ஆண்டவரே, நீர் எனக்கு நல்லவராகவே, இருந்து வந்திருக்கிறீர்" என்றேன்.

என் கண்கள் அப்பொழுது மூடப்பட்டிருந்தன. அப்பொழுது ஏதோ அசைவது போன்ற சத்தத்தைக் கேட்டேன்.

கண்களைத் திறந்து பார்த்தபோது, எனக்கு முன்னால் மூன்று மான்கள் நின்று கொண்டிருந்தன, நான் "சகோதரன் ஈவான்ஸுக்கு ஒன்றும், சகோதரன் உட்டுக்கு ஒன்றும்... அதோ மூன்று மான்கள். இதற்காகவே நான் காத்துக்

கொண்டிருந்து, காடுகளில் நடந்து சென்றேன்'' என்று எண்ணியவாறே துப்பாக்கியைக் கையிலெடுத்தேன். ''இதை என்னால் செய்யமுடியாது, அப்படிச் செய்யமாட்டேன் என்று நான் ஆண்டவருக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்'' என்று கூறி என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.

அப்பொழுது ஏதோ ஒன்று, ''ஆனால் அவை உன் முன்னால் நிற்கின்றனவே!'' என்றது.

நான், ''அப்படித்தான் ஒரு மனிதன் ஒரு முறை தாவீதிடம், கர்த்தர் அவரை (சவுலை) உன் கையில் ஒப்புக் கொடுத்தார் என்றான்'' என்று நினைத்துக் கொண்டேன். உங்களுக்கு சவுல் ராஜாவைப் பற்றி தெரியும்.

யோவாப் தாவீதிடம், ''அதோ அவர் அங்கு படுத்துக் கொண்டிருக்கிறார். அவரைக் கொன்றுபோடும்'' என்றான்.

''கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொல்லாதபடி, கர்த்தர் என்னைக் காப்பாராக'' என்றான் தாவீது.

அந்த மான்கள் அங்கு நின்று கொண்டு என்னையே நோக்கிக் கொண்டிருந்தன. நான் "அவை தப்பிப் போகமுடியாது. தப்ப அவைகளுக்கு வழியேயில்லை. அவை முப்பது கெஜ தூரம்கூட இல்லை. என்னிடம் துப்பாக்கியும் இருக்கிறது" என்று எண்ணினேன். அதே சமயத்தில், "அதை என்னால் செய்ய முடியாது. என்னால் முடியவே முடியாது" என்றேன். அது ஒரு பெண் மானும், இரண்டு குட்டிகளுமாயிருந்தன. என்னால் துப்பாக்கியை எடுக்கவே முடியவில்லை. நான் அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தேன். நான், "அவ்விதம் செய்யமாட்டேனென்று தேவனிடம் வாக்கு கொடுத்திருக்கிறேன். அந்த சகோதரருக்கு இந்த மான்கள் தேவையில்லை. என்னால் முடியாது என்னால் முடியவே முடியாது" என்று எண்ணினேன்.

அப்பொழுது அந்தப் பெண் மான் நடந்து அருகில் வந்தது. கவனியுங்கள். நாலைந்து நாட்களாக நூறு பேர்கள் மான்களைச் சுட்ட வண்ணம் இருந்தனர். அதனால் மான்கள் பயம் கொண்டிருக்க வேண்டும். சிகப்பு வண்ணத்தைக் கண்ட மாத்திரத்தில் அவை ஓடி மறைந்துவிடும்

(நான் சிகப்பு சட்டையும் சிகப்பு தொப்பியும் அணிந்திருந்தேன்). ஆனால் இந்த மூன்று மான்களும் அங்கேயே நின்று கொண்டு என்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

நான் பெண் மானிடம், “தாயே, உன் குட்டிகளை அழைத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றுவிடு. நீ இப்பொழுது என் கைக்குள் இருக்கிறாய். உன் உயிரும் என் கைக்குள் இருக்கிறது. ஆனால் நான் உன்னைத் துன்புறுத்தப் போவதில்லை. அவ்விதம் நான் ஆண்டவருக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்” என்றேன். ஆனால் அந்தப் பெண்மானோ என்னருகில் வந்து என்னை உற்றுப் பார்த்தது. அந்த குட்டிகளும்கூட அருகாமையில் வந்தன. (சகோ. பிரான்ஹாம் பீடத்தை இருமுறை தட்டுகிறார் - ஆசி). என் கையிலிருந்து புல்லைத் தின்னும் தூரமளவுக்கு அவை அருகாமையில் வந்தன. காற்று அவைகள் மேல் வீசினது. எனவே பெண் மான் திரும்பி சற்று தூரம் நடந்தது. குட்டிகளும் அதைப் பின் தொடர்ந்தன.

பின்பு அவை மறுபடியும் என் பக்கம் திரும்பி, என்னருகில் நடந்து வந்தன. நான்

அசையாமல் அங்கேயே நின்றேன். நான், “நீங்கள் காட்டுக்குள் சென்று விடுங்கள். எனக்கும் காடு என்றால் அதிகப் பிரியம். நீங்கள் உயிர் வாழுங்கள். உங்கள் உயிர் என் கரங்களில் இருக்கிறது. ஆனால் நான் உங்களை சும்மா விட்டு விடுகிறேன். உங்களால் தப்பிச் செல்லவே முடியாது என்று உங்களுக்குத் தெரியும்” என்றேன். மூன்றே வினாடிகளில் அவை மூன்றயும் என்னால் கொன்றுவிட முடியும். என்னால் எவ்வளவு வேகமாக சுட முடியுமோ, அவ்வளவு வேகமாக அவை என்னருகில் இருப்பதால் தப்பி ஓடிவிட முடியாது. எனவே “உங்களை விட்டு விடுகிறேன். நீங்கள் சென்று உயிர் வாழுங்கள்” என்றேன். நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அவை நடந்து காட்டிற்குள் சென்று விட்டன.

என் முகத்தை நான் இப்படி துடைத்துக் கொண்டேன். அப்பொழுது ஒரு சம்பவம் நடந்தது. அந்தத் தெளிவான வானத்திலிருந்து - மேகத்திலிருந்து அல்ல - ஒரு சத்தம் என்னுடன் பேசினது. இது சிறிது நேரத்திற்குள் நடந்தது. அந்த சத்தம் என்னிடம், “உன் வாக்கை நீ நினைவு கூர்ந்தாய் அல்லவா?” என்றது.

நான், “ஆம், ஆண்டவரே” என்றேன்.

அவர், “நானும் என் வாக்கை நினைவு கூருவேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” என்றார். உடனே என் இருதயத்திலிருந்த பாரம் அகன்றது. அதன் பின்பு அது வரவேயில்லை. இனிமேல் அது வாராமலேயே இருக்கட்டும்.

★★★★★

நான் வேட்டைக்குச் செல்லும் போது அவரே எனக்கு வழிகாட்டி. நான் மீன் பிடிக்கச் செல்லும் போது, அவரே எனக்கு வழிகாட்டி. யாருடனும் நான் பேசும் போதும் அவரே எனக்கு வழிகாட்டி. நான் பிரசங்கம் செய்யும் போது, அவரே எனக்கு வழிகாட்டி, நான் உறங்கும் போது, அவரே எனக்கு வழிகாட்டி.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

(குறிப்பு: நாம் உருவாக்கி அனுப்பும் இந்த மேற்கோள்களுக்கான பாராக்கள் அனைத்துமே பெரும்பாலும் இணையதளத்தில் இருந்து அப்படியே காப்பி செய்து உருவாக்கப்படுகின்றன. இந்த செய்தியும் அவ்வாறு காப்பி செய்யப்பட்டது தான். இந்த பாராக்களை வாசித்தால், அநேக எழுத்துப் பிழைகள் உள்ளதை நீங்கள் காணலாம். இதற்காக வருந்துகிறேன். எனவே உங்களிடம் **ஒரு வழிகாட்டி** என்ற இந்தச் செய்தி புத்தகம் இருந்தால், அந்த செய்தி புத்தகத்தில் **பாரா 108 முதல் 150** வரை வாசித்து பார்த்துக்கொள்ளுங்கள்.)

---

## செய்தி: 62-10-14E ஒரு வழிகாட்டி

---

108. காட்டுப் பிரதேசங்களில் செல்வதில் நான் கைதேர்ந்தவன் என்னும் எண்ணம் எனக்கு ஒருமுறை தோன்றிற்று. பாருங்கள், நான் அதிகமாக வேட்டையாடியவன். எனவே நான் காட்டில் வழி தவறவே முடியாது என்ற எண்ணம் கொண்டிருந்தேன். என் தாய் பாதி சிவப்பு

இந்தியர் எனவே காட்டுக்குச் செல்வதை நான் அதிகம் விரும்பினேன். நான் காட்டில் வழி தவறவே முடியாது, அங்கு நான், எங்கிருக்கிறேன் என்பதை நன்கு அறிவேன் என்று எண்ணி விருந்தேன்.

109. எங்கள் தேன் நிலவின் போது ...... என் மனைவியை அவ்விஷயத்தில் ஒரு விதமாக சற்று ஏமாற்றினேன். நான் அவளிடம் "அன்பே, அக்டோபர் 23ம் தேதியன்று நாம் விவாகம் செய்து கொள்வது நல்லது' 'என்றேன். அன்று தான் நான் விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்று கர்த்தர் என்னிடம் கூறியிருந்தார்.

110 ஒரு சிறு தேன்நிலவுக்குச் செல்லலாமென்று நான் தீர்மானித்தேன். அதற்காக காசை சேமித்து வைத்திருந்தேன். என் மனைவியை நயாகரா நீர் வீழ்ச்சிக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து அடிரோன்டாக் மலையின் மேலேறி சற்று வேட்டையாடலாம் என்று தீர்மானித்தேன். நான் மனைவியையும் பில்லியையும் கூட்டிச் சென்றேன். அப்பொழுது பில்லி சிறுவன். அவளை நான்

தேன் நிலவுக்குக் கொண்டு சென்றேன். அது வேட்டை பயணமும்கூட. அப்படி செய்வது நல்லதென்று எண்ணினேன். நான் அவளை மேலே கூட்டிச் சென்றேன்.

111. நான் காட்டு அதிகாரி திரு. டென்டனுக்கு கடிதம் எழுதினேன். நாங்கள் ஹரிக்கேன் மலையின் மேலும் செல்லத் தீர்மானித்திருந்ததால், நான் கடிதத்தில், "திரு. டென்டன் அவர்களே, நான் மலையின் மேல் வரப்போகிறேன். உங்களுடன் குளிர் பருவத்தில் கரடி ' வேட்டையாட விரும்புகி றேன்'' என்று எழுதியிருந்தேன்.

112. அவரும், 'சரி, பில்லி, மேலே வாருங்கள்'' என்று பதில் எழுதியிருந்தார். ஒரு பிரத்தியேக நாளை அவர் குறிப்பிட்டு. "அந்த நாளில் நான் அங்கிருப்பேன்" என்று எழுதியிருந்தார். நானும் மனைவியும் பில்லியும் ஒரு நாள் முன்னதாகவே அங்கு சென்றுவிட்டோம். அவருடைய அறை பூட்டியிருந்தது. காட்டுக்கு திரும்பிச் செல்லவேண்டுமெனும் எண்ணம் எனக்குள் தோன்றியது.

113. அந்த இடத்திற்கு தான் நானும் சகே. ஃபிரட் சாத்மனும் அண்மையில் சென்றிருந்தோம். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அங்கு நின்று கொண்டிருப்பதைக் கண்டேன் - மஞ்சள் ஒளி வடிவத்தில் புதரில் அசைந்து. கொண்டிருந்தார். ஃபிரட் அங்கு நின்று கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவர் என்னிடம், "சற்று தனியே வா. நான் உன்னுடன் பேசவேண்டும்" என்றார். நான் சென்ற போது அவர் என்னிடம், "நாளை கவனமாயிரு . அவர்கள், உனக்கு கண்ணி வைத்திருக்கின்றனர்" என்றார். சகோ.ஃபிரட், அது சரியா? அன்றிரவு நான் வெர்மாண்டுக்கு சென்று நூற்றுக்கணக்கான ஜனங்களிடம், "எனக்கு கண்ணி வைக்கப்பட்டுள்ளது. அதை நான் பார்க்கத் தான் போகிறேன். அது எந்தவிடத்தில் என்று தெரியவில்லை'' என்றேன். அடுத்த இரவே அது நிகழ்ந்தது. அவர், "இந்தவிடத்தில் தான் உனக்கு கண்ணி வைக்கப்பட்டுள்ளது'' என்றார். ஆம், ஐயா நான் என்ன செய்ய வேண்டுமென்று

அப்பொழுது. பரிசுத்த ஆவியானவர் என்னை வழி நடத்தினார். ஓ. என்னே , அவர் கூறினது உண்மையாயிருந்தது. உங்களில் அநேகருக்கு அது தெரியும். அதை முழுவதும் கூற எனக்கு நேரமில்லை.

114. அதேவிடத்தில் நானும் மனைவியும் பில்லியும் நின்றுகொண்டிருந்த போது, அங்கு குளிரத் தொடங்கினது. திரு. டென்டன் அடுத்த நாள் தான் வருவார். எனவே நான் மனைவியிடம், " அன்பே . ஒரு ஆண் மானை (buck) நாம் வேட்டையாடிக் கொண்டு சென்றால் நலமாயிருக்கும். என்னிடமுள்ள பணத்தை நான் மிச்சப்படுத்த வேண்டும் ஏனெனில் இப்பொழுது தான் நமக்கு விவாகமாகியுள்ளது இன்று வேட்டை கிடைத்தால், குளிர் காலத்திற்கு வேண்டிய மாமிச ஆகாரம் நமக்கு கிடைத்து விடும்'' என்றேன்.

115. அவளும் , "சரி, பில்லி, போய் வாருங்கள். ஆனால் காட்டில் இதற்கு முன்பு நான் இருந்ததில்லை என்பதை மாத்திரம் ஞாபகம் கொள்ளுங்கள்'' என்றாள்.

116. நான் அவளிடம், "இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் நான் மூன்று கரடிகளை இந்தவிடத்தில் கொன்றேன். அது அந்த பக்கம் மலையின் உச்சியில்" என்று கூறிவிட்டு, "பெரிய ஆண்மான் ஒன்றை வேட்டையாடிக் கொண்டு வருகிறேன். நமக்கு கரடியும் கிடைக்கலாம். மான் நமது குளிர்கால ஆகாரமாயிருக்கும்'' என்றேன். அது மிகவும் நல்லதாக தென்பட்டது. (அந்த குளிர்காலத்தில் நான் வேலையிலிருந்து வீடு திரும்பினவுடன், நானும் மேடாவும் மாலையில் பழங்களைப் பொறுக்குவோம். பில்லி அதை விற்று வருவாள். அந்த காசைக் கொண்டு நாங்கள் நிலக்கரி வாங்குவோம்). நான் அவளிடம், "என் துப்பாக்கியுடன் அங்கு போகப்போகிறேன். அங்கு நிறைய மான்கள் உள்ளன. ஒன்கிலும் என் கண்ணில் படும். அதை வேட்டையாடிக் கொண்டு வருவேன். சிறிது நேரத்தில் திரும்பி வந்து.. விடுவேன்" என்றேன். அவளும், "சரி'' என்றாள்.

117. நான் புறப்படும் போது சற்று குளிராயிருந்தது மூடுபனி இறங்கினால் என்ன நேரிடுமென்று நியூ ஹாம்ப்ஷயர். அல்லது சற்று உயரேயுள்ள நியூ இங்கிலாந்தைச் சேர்ந்த உங்களில் சிலருக்குத் தெரியும். மலையின் மேல் எங்காவது மூடு பனி இறங்கினால், நாம் எங்கிருக்கிறோம் என்று தெரியவே தெரியாது. அவ்வளவு தான். உங்களுக்கு முன்னால் உங்கள் கையை நீட்டினால், அதைகூட காணமுடியாது. நான் கீழே இறங்கி, முகடை (ridge) கடந்து, மேலேறினேன். அப்பொழுது ஒரு சிறுத்தையைக் கண்டேன். அதை நாம் வெவ்வேறு பெயரினால் அழைக்கிறோம். அது ஒன்பது அடி நீளம், 150 அல்லது 200 பவுண்டு எடையிருக்கும். அது கடந்து சென்றபோது, துப்பாக்கியை வேகமாக கையிலெடுத்தேன்; ஆனால் அதை சுடுவதற்கு போதிய அளவு வேகமாக எடுக்கவில்லை.

118. அது சென்ற திசையில் இலைகளின் அசைவை கவனித்துக் கொண்டே நான் துரத்திச் சென்றேன். இலைகளின் அசைவை

என்னால் கேட்க முடிந்தது. அதற்கு நான்கு கால்கள் உண்டு. அதன் அடிச்சுவடுகளிலிருந்து அது இரண்டு கால் மிருகமல்ல என்று அறிந்து கொண்டேன். அது மான் அல்ல என்றும் எனக்குத் தெரியும். ஏனெனில் மான் குதித்து ஓடும். ஆனால் சிறுத்தையோ எளிதாக நழுவி விடும். கரடி நடக்கும் போது, காலை உருட்டிக் கொண்டே நடக்கும். எனவே அது சிறுத்தைதான் என்று அறிந்து கொண்டேன், அது மரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்தது. அதை நான் கவனிக்கவில்லை. ஆனால் நான் பார்த்த மாத்திரத்தில் அது மறைந்து விட்டது.

119. மலையுச்சியில் அது இலைகளை அசைத்துக் கொண்டு போகும் விதத்தையே கவனித்துக் கொண்டிருந்ததால், மூடுபனி இறங்குவதை நான் கவனிக்கவில்லை இந்த சிறுத்தையைப் பின்தொடர்ந்தே பள்ளத்தாக்கின் வழியாகவும் --மலையின் மேலும் நான் சென்று கொண்டிருந்தேன். " அதை. எப்படியாவது பார்த்துவிடுவேன்'' என்று எண்ணினேன், நான் உயரமான

ஓரிடத்திற்கு ஓடிச் சென்று, சுற்றும் முற்றும் பார்த்து தேடுவேன். ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கூர்ந்து கவனிப்பேன். பின்பு கீழே இறங்கி வருவேன். இந்த சிறுத்தை சாமர்த்தியமாக மரத்திற்கு மரம் தாவிச் சென்றதால், மரக்கிளைகள் முறிந்து விழும் சத்தத்தை என்னால் கேட்க முடிந்தது. ஆனால் அதன் அடிச்சுவடுகளை என்னால் பின் தொடர முடியவில்லை.

120. நான் திரும்ப பள்ளத்தாக்குக்கு வந்தபோது, அங்கு ஒரு கிழ ஆண் கரடியை முகர்ந்தேன். "எப்படியாவது அது கிடைத்து விடும்" என்று எண்ணினேன். நான் மறுபடியும் முகர்ந்து நோக்கினேன் நான் சற்று தூரம் சென்று ஏதாவது அடையாளம் தெரிகின்றதா என்று கவனித்தேன், எதையும் என்னால் காணமுடியவில்லை. நான் கீழே இறங்கி வந்து, மறபடியும் மலைக்குச் சென்றேன். அப்பொழுது மூடுபனி இறங்குவதை கவனித்தேன். நான் மறுபடியும் முகர்ந்து நோக்கினேன். அந்த கரடி அங்குதான் எங்கோ இருந்தது. நான், "காற்று

இந்தப் பக்கம் அடிக்கிறது, ஆனால் கரடியின் மணம் மறுபக்கத்திலிருந்து வருகிறதே! இருக்காது. நான் கடந்து வந்து வி-டேன். காற்று அந்த பக்கத்திலிருந்து வருகிறது. எனவே நான் முதன் முறையாக கரடி மணத்தை முகர்ந்த இடத்திற்கு திரும்பிச் சென்று அங்கிருந்து வர வேண்டும்'' என்று நினைத்தேன்.

121. நான் திரும்பிச் சென்று கொண்டிருந்த பாதையிலிருந்து பள்ளத்தாக்கைப் பார்த்தபோது, புதர்கள் அசைவதைக் கண்டேன். கறுத்த ஒன்று அங்கு அசைந்தது. ''அங்கிருக்கிறது'' என்று நினைத்து தோட்டாவை துப்பாக்கியில் வேகமாக நிறைத்து, அசையாது அங்கு நின்று கொண்டிருந்தேன். அது ஒரு பெரிய ஆண் மான் -மிகப்பெரியது. ''இது எனக்கு வேண்டு மென்று எண்ணிபிருந்தேன்" என்று நினைத்து அந்த ஆண் மானைச் சுட்டேள்.

122, ''நல்லது" என்று நினைத்தேன். என் கைகளைத் துடைத்து, என் கத்தியை ஆயத்தப்படுத்தி, அதை மறுபடியும்

உறையில் போட்டேன். நான், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி. குளிர்காலத்திற்கு வேண்டிய மாமிச ஆகாரத்தை எனக்குத் தந்து விட்டீர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று நினைத்துக் கொண்டு துப்பாக்கியைக் கையிலெடுத்தேன். "நான் பள்ளத்தாக்கு செல்லட்டும்" என்று எண்ணினேன். அப்பொழுது புயல் வரத்தொடங்கினது. ''இதோ புயல் வருகிறதே, நான் துரிதமாக மேடாவிடம் செல்லட்டும், நான் வேகமாக செல்லவேண்டும்'' என்று நினைத்துக் கொண்டேன்:

123. நான் பள்ளத்தாக்குக்கு மேலே சென்று, என் சிவப்பு - கோட்டை கழற்றினேன். நான் இவ்வாறு பள்ளத்தாக்குக்கு: மேலே ஓடினேன். நான் திசை தவறி விட்டேன். "நான் எங்கிருந்து புறப்பட்டேன்?'' என்று யோசிக்கத் தொடங்கி னேன். காற்று வேகமாக அடிக்கத் தொடங்கிவிட்டது மரங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. நான் நேராக ஹரிக்கேன்

மலைக்குச்சென்று கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நான் சற்று நேரம் நின்றேன். எனக்கு வியர்க்கத் தொடங்கினது. "என்ன நேர்ந்தது? நான் அரை மணி நேரம் முக்கால் மணி நேரமாக சென்று கொண்டிருக்கிறேன், நான் புறப்பட்டு வந்த இடத்தை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லையே!'' என்று நினைத்துக்கொண்டே மேலே நோக்கினபோது, நான் சுட்ட அந்த மான் அங்கு தொங்கிக் கொண்டிருந்தது. நான் மீண்டும்: அந்த இடத்திற்கே வந்து விட்டேன். ''நான் என்ன செய்தேன்?" என்று வியந்தேன்.

124. நான் மறுபடியும் புறப்பட்டேன். 'இந்த முறை எப்படியாவது கண்டு பிடித்துவிடுவேன். நான் சரியாக கவனிக்கவில்லை" என்று நினைத்தேன். நான் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து கவனித்து, தேடிக் கொண்டே சென்றேன். நான் தேடினேன், தேடினேன், மேகங்கள் வரத் இதாடங்கின, பனிப்புயல் வரப்போகின்றது என்று எனக்குத் தெரியும். மூடுபனி கீழே

இறங்கியிருந்தது. "இன்னும் சிறிது தூரம் செல்லலாம்" என்று எண்ணியவனாய் நடந்து சென்றேன், சென்றேன், சென்றேன். "மிகவும் வினோதமாயுள்ளதே. இந்த இடத்தை நான் முன்பு கண்டிருக்கிறேனே'' என்று நினைத்தேன். நான் பார்த்தபோது, நான் சுட்ட அந்த மான் அங்கு தொங்கிக் கொண்டிருந்தது. நான் மீண்டும் அதே இடத்திற்கு வந்து விட்டேன் .

125. நான் என்ன செய்து கொண்டிருந்தேன் தெரியுமா? இதை தான் சிகப்பு இந்தியர்கள், 'மரண நடை' (Death walk) என்று அழைக்கின்றனர். பாருங்கள், வட்டம் சுற்றி. சுற்றி அதே இடத்திற்கு வருதல், நான் மிகவும் கைதேர்ந்த" வழிகாட்டியென்றும், நான் ஒரு போதும் வழி தவறவே முடியாதென்றும் எண்ணியிருந்தேன். யாருமே எனக்கு காட்டில் வழிகாட்டவேண்டிய அவசியமில்லை, எனக்கு எல்லா பானதயுமே நன்றாகத் தெரியும் என்று நினைத்திருந்தேன். பாருங்கள்?

126. நான் மீண்டும் புறப்பட்டேன். ''இம்முறை அதே தவறை புரியமாட்டேன்" என்று நினைத்தேன். ஆனால் மறுபடியும் அதே இடத்திற்கு வந்து விட்டேன்.

127. நான் பள்ளத்தாக்குக்கு சற்று மேலே சென்றேன். அப்பொழுது புயல் அடிக்கத் தொடங்கினது. எங்கு பார்த்தாலும் பனி! இருட்டாகி விட்டது. மேடா இரவில் காட்டில் மரித்துப் போவாள் என்று பயந்தேன். ஏனெனில் காட்டில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அவளுக்குத் தெரியாது. பில்லி அப்பொழுது மூன்று வயது சிறுவன். " அவர்கள் என்ன செய்வார்கள்" என்று பயந்தேன். நான் சிறிது அடி எடுத்து வைத்தபோது, பாசி குளத்தில் கால் வைத்துவிட்டேன். எங்கு பார்த்தாலும் மூடுபனி. எதையும் என்னால் காண முடியவில்லையே'' என்று நினைத்தேன்.

128. சாதாரணமாக இப்படிப்பட்ட சூழ்நிலையில், யாராகிலும் என்னுடன் இருந்திருப்பார்களானால், நான். ஓரிடத்தை அடைந்து, புயல் தீரும் மட்டும் ஓரிரண்டு

நாட்கள் அங்கேயே தங்கியிருப்பேன். நான் சுட்டுக் கொன்ற மானை அறுத்து, சமைத்து புசித்து. இதைக் குறித்து கவலையே படாமல் இருந்திருபேன். ஆனால் என் மனைவியும் பிள்ளையும் காட்டில் மரிக்கும் தருவாயில் உள்ளபோது. என்னால் அப்படி செய்ய முடியாது.

129. எனவே "என்ன செய்யலாம்?'' என்று யோசிக்கத் தொடங்கினேன். நான் சற்று தூரம் நடந்து சென்றேன். 'நான் முதல் பள்ளத்தாக்கை கடந்து வந்தபோது, காற்று என் முகத்தில் அடித்தது. எனவே நான் இந்த வழியாகத் தான் வந்திருக்கவேண்டும். இந்த வழியில் தான் நான் செல்ல வேண்டும்'' என்று யோசித்தேன். நான் கணவாய்களின் வழியாக அலைந்து திரிந்தேன். ஆனால் நான் எங்கிருக்கிறேன் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு திகில் உண்டானது. "பில், ஒரு நிமிடம் பொறு. நீ காணாமற் போகவில்லை'' யென்று என்னிடமே நான் பொய் சொல்ல முயன்றேன். அப்படி நீங்கள் பொய் சொல்ல முடியாது. உங்கள் உள்ளான

மனச்சாட்சி நீங்கள் தவறென்று உங்களிடம் கூறும்.

130 நீங்கள், "நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், நான் சபைக்குச் செல்கிறேன்" என்று கூறலாம். மரணப்படுக்கை வரும் வரை காத்திருங்கள். காரியம் வித்தியாசமாயுள்ளதென்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள். உங்கள் மனச்சாட்சி - உங்களுக்குள் இருக்கும் ஒன்று - நீங்கள் தவறென்று உங்களிடம் கூறும். பாருங்கள்? நீங்கள் மரித்துப் போனால், பரிசுத்தமுள்ள தேவனை உங்களால் சந்திக்க முடியாது என்று உங்களுக்கு தெரியும். கடந்த இரவு நாம் பார்த்த விதமாக, அவருக்கு முன்பாக நிற்க, பரிசுத்த தேவதூதர்களும் கூட தங்கள் முகங்களை மறைக்க வேண்டிய தாயுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உங்களை மறைக்காமல் போனால், நீங்கள் எப்படி அவர் சந்நிதியில் நிற்க முடியும்?

131. ''நான் எப்படியாகிலும் வழி கண்டு பிடித்து வீடுவேன்" என்று நினைத்தவாறே, காட்டில் நடந்து செல்லத் தொடங்கினேன்.

அப்பொழுது ஏதோ ஒரு சத்தம் கேட்கத் தொடங்கினது. எனக்கு பயமுண்டாயிற்று. 'இப்படியே செய்தால், நான் துண்டு துண்டாகப் போய் விடுவேன்'' என்று எண்ணினேன். காட்டில் பாதை தவறிய மனிதனுக்கு அது தான் நேரிடும். அவன் துண்டு துண்டாகப் போய் விடுவான். அவன் துப்பாக்கியை எடுத்து தன்னை சுட்டுக் கொள்வான். அல்லது ஒரு குழியில் விழுந்து காலை ஒடித்துக் கொண்டு, அங்கேயே விழுந்து மரித்துப் போவான். "நான் என்ன செய்வேன்?'' என்று நினைத்துக் கொண்டே நடந்து செல்லத் தொடங்கினேன்.

132. அப்பொழுது ஒரு சத்தம், "ஆபத்துக் காலத்தில் நான் அனுகூலமான துணை" என்று சொல்லிக் கொண்டே யிருப்பதை நான் கேட்டேன். நான் நடந்து கொண்டே சென்றேன்.

133. "இப்பொழுது எனக்கு பயம் சற்று தெளிந்து விட்டது. ஒரு சத்தம் என்னுடன் பேசுகின்றது'' என்று நினைத்து நடந்து செல்லத் தொடங்கினேன் அந்த சத்தம் "வ்யூ ,

வ்யூவ்பூ' என்னும் விசில் ஓசையை உண்டாக்கியது, சற்று முன்பு தான், நான், 'பில்லி, நீ காணாமற் போகவில்லை. நீ எங்கிருக்கிறாய் என்று உனக்குத் தெரியும். நீ காணாமற் போகவே முடியாது. நீ சிறந்த வேட்டைக்காரன். நீ காணாமற் போகவே முடியாது'' என்று பெருமையடித்துக் கொண்டு என்னிடமே பொய் சொல்லிக் கொண்டேன்.

134, அவ்வாறு நாம் பொய் சொல்லமுடியாது. ஏனெனில் இங்கு ஒரு சிறிய சக்கரம் சுழன்று, "நீ வழி தவறி விட்டாய். அது உனக்குத் தெரியும்' என்று சொல்லும்

135. "நான் வழிதவறவில்லை. நான் எப்படியாவது வழி கண்டுபிடித்து விடுவேன்'' என்று நினைத்துக் கொண்டே நடந்து சென்றேன். காரியங்கள் வினோதமாகத் தொடங்கின, காற்று அடித்து, பனி இங்கும் அங்கும் பறக்கத் தொடங்கினது. என் மனைவியையும் பிள்ளையையும் நினைக்கத் தொடங்கினேன்

136. மறுபடியும் , "ஆபத்துக் காலத்தில் நான் அனுகூலமான துணை'' என்னும் சத்தத்தை நான் நேரடியாகக் கேட்டேன். அப்பொழுது நான் ஒரு போதகராக, இக்கூடாரத்தில் பிரசநகம் செய்யும் போதகராக இருந்தேன்.

187. " என்ன செய்யலாம்?" என்று நினைத்தேன். நான் தின்று சுற்றும் முற்றும் பார்த்தேன். மூடுபனி முழுவதுமாக இறங்கி விட்டது. அவ்வளவுதான். வேறொன்றும் செய்ய முடியாது. "என்ன செய்யலாம்?" என்று திகைத்தேன் நான், "ஐயா, நான் வாழத் தகுதியற்றவன். எனக்கு அதிக தன்னம்பிக்கை இருந்தது. நான் பெரிய வேட்டைக்காரன் என்று எண்ணியிருந்தேன். ஆனால் நான் அப்படியல்ல" என்று நினைத்துக் கொண்டேன்.

138. சகோதரனே, நான் எப்பொழுதும் அவரையே நம்பியிருக்கிறேன். துப்பாக்கி சுடுதலல் நான் அநேக சாதனைகள் புரிந்திருக்கிறேன். மீன் பிடிப்பதிலும் நான் ஒன்றுமற்றவன். ஆனால் நான் எப்பொழுதும்

அவரையே நம்பியிருக்கிறேன். சுடுவதிலும் நான் ஒன்றுமற்றவன். ஆனால் அவரோ நான் உலக சாதனைகள் புரியும்படி செய்திருக்கிறார். பாருங்கள்? எழுநூறு, எண்ணூறு கெஜ தூரத்திலிருந்து நான் மானைச் சுட்டுக் கொன்றிருக்கிறேன். ஒரு குறி கூட தவறாமல், முப்பந்தைந்து மிருகங்களைக் கொன்றிருக்கிறேன். அப்படிப் பட்ட சாதனைகளை நீங்கள் எங்காகிலும் படித்ததுண்டா? நானல்ல, அவரே. அவரை நான் நம்பியிருக்கிறேன்.

"என்ன செய்வது?'' என்று திகைத்தேன்.

-

139. அப்பொழுது அந்த சத்தம் அருகில் வரத் தொடங்கினது: ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணை. அனுகூலமான துனை".

140. ''கர்த்தர் என்னுடன் பேசுகின்றாரா?'' என்று நினைத்தேன். நான் தொப்பியைக் கழற்றினேன். நான் உலாவும் காவலர் (Patrol) தொப்பியை அணிந்து

கொண்டிருந்தேன். ஒரு சிவப்பு கைகுட்டை அதில் சுற்றப்பட்டிருந்தது. என் தொப்பியை கீழே வைத்தேன். என் கோட்டை கழற்றி னேன். அது நனைந்திருந்தது. அதை கீழே வைத்து விட்டு, துப்பாக்கியை மரத்தில் சாய்த்து வைத்தேன். நான் ''பரலோகப் பிதாவே, என் திறனுக்கு மீறின நிலைக்கு வந்து விட்டேன், என்னுடன் பேசும் ஒரு சத்தத்தைக் கேட்கிறேன். அது நீர் தானா?' என்றேன். நான், "நான் ஒரு வேட்டைக் காரன் அல்லவென்று உம்மிடம் ஒப்புக் கொள்ளப் போகிறேன். என் வழியை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனக்கு நீர் உதவி செய்யவேண்டும். எனக்கு அதிகம் தெரியும் என்றும், நான் காட்டில் வழி தவறவே மாட்டேன் என்றும் நினைத்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ததால் நான் இனிமேல் வாழத்தகுதியற்றவன். ஆண்டவரே, நீர் எனக்குத் தேவை. என் மனைவி நல்லவள். என் குழந்தை - அவனுடைய தாய் மரித்து விட்டாள். இவள் அவனுக்குத் தாயாக இருக்க முயல்கிறாள்,

அவளை இப்பொழுது தான் நான் விவாகம் செய்தேன். அவளும் குழந்தையும் காட்டில் இருக்கின்றனர். இருவரும் இன்றிரவு மரித்து விடுவார்கள். அந்த காற்று உஷ்ணத்தை பூஷ்யத்துக்கு கீழே பத்து டிகிரிக்கு கொண்டு வந்து விடும். அந்த குளிரில் எப்படி உயிர் வாழ்வதென்று அவர்களுக்குத் தெரியாது, இன்றிரவு அவர்கள் மரித்து விடுவார்கள், தேவனே, அவர்கள் மரிக்க விட்டுவிட வேண்டாம். என்னை அவர்களிடம் கொண்டு சேர்ப்பீராக! அப்பொழுது அவர்கள் மரிக்காமல் பாதுகாத்துக் கொள்வேன். நான் பாதை தவறி விட்டேன். தேவனே, நான் பாதை தவறி விட்டேன்! என் --வழியை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. எனக்குதவி செய்ய மாட்டீரா? என் சுயநல போக்கை மன்னியும். உம்மையன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது, நீரே என் வழி காட்டி. ஆண்டவரே, எனக்குதவி செய்யும்" என்று ஜெபித்தேன்.

141. நான் எழுந்து நின்று, " ஆமென்' என்றேன். என் கை குட்டையையும் என்

கோட்டையும் கையிலெடுத்துக் கொண்டேன், தலையில் தொப்பியை அணிந்து கொண்டேன். என் துப்பாக்கியை கைலெடுத்தேன் நான், ''எனக்குத் தெரிந்த வரை சிறந்தவழியில் நான் நேரகாச் சொல்லப் போகிறேன. நான் வட்டம் சுற்றி சுற்றி அதே இடத்திற்கு வந்து கொண்“டிருக்கிறேன். தேவனாகிய கர்த்தாவே, என் வழி காட்டியே. நீர் காண்பிக்கும் வழியில் நான் செல்வேன்" என்றேன்.

142. நான் இந்த வழியில் நடந்து செல்லத் தொடங்கினேன். நான், "இதுதான் சரியான வழி. இந்த வழிபில் நேராகச் செல்லப் போகிறேன். நான் வழி மாறப்போவ தில்லை. இந்த வழியில் நேராகச் செல்லப் போகிறேன்'' -என்று தீர்மானித்தேன். அந்த வழியில் சென்றிருந்தால், தான் கனடாவை அடைந்திருப்பேன். பாருங்கள்?

143. அப்பொழுது யாரோ ஒருவர் என் தோளைத் தொடும் போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அது ஒரு மனிதனின் கையைப் போல் தோன்றினது. நான் திரும்பிப்

பார்த்தேன். யாரும் அங்கு நின்று கொண்டிருக்கவில்லை, "இது என்ன?" வென்று அதிசயமுற்றேன், நான் கூறுவது உண்மை. வேதாகமம் எனக்கு முன்னால் உள்ளது, என் வழிகாட்டியும் நியாயதிபதியுமாகிய தேவன் இங்கு பிரசன்னராயிருக்கிறார். நான் மேலே நோக்கினேன், அப்பொழுது இந்த பக்கத்தில் மூடுபனி மறைந்து, ஹரிக்கேன் மலையின் மேலுள்ள கோபுரத்தை என்னால் காண முடிந்தது. எனக்கு வேட்டைத்திறன் இருந்த போதிலும், இவ்வளவு நேரமாக அந்த கோபுரத்தை விட்டகன்று சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது மாலை நேரமாகி விட்டது. நான் திரும்பி, அந்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கினேன். நான் தொப்பியைக் கழற்றி கைகளையுயர்த்தி, ' தேவனே, எனக்கு வழி காட்டும். நீரே என் வழி காட்டி'' யென்று ஜெபிதேதேன்,

144. நான் நடக்கத் தொடங்கினேன். நான் செங்குத்தான் பாறைகளின் மேல் ஏறிச்செல்ல வேண்டும் அப்பொழுது

இருட்டாகி விட்டது. மான்கள் என் முன்னால் துள்ளி ஓடின. தான் எதையும் யோசனை பண்ணாமல், அந்த கோபுரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினேன்,

145. அந்த கோபுரத்தை நான் அடைந்து விட்டால் - 1 வசந்த காலத்தில் நானும் திரு. டென்டனும் தொலை பேசி கம்பிகளை அங்கு நாட்டினோம். ஹரிக்கன் மலைபிலிருந்தும் -- கீழே மூன்றரை நான்கு மைல்கள் வரை நாங்கள் ஒரு பாதையில் அந்த கம்பிகளை நாட்டினோம். ஆனால் பனியின் காரணம் மாக அந்த பாதை கண்ணுக்குத் தெரியவில்லை. காற்று பாலமாக வீசினது. இருட்டாகி விட்டது. பனியும் பெய்து கொண்டிருந்ததால், எங்கிருக்கிறோம் என்றே தெரியவில்லை. நான் செய்யக் கூடிய ஒன்றே ஒன்று ... நான் ஒரே பாதையில் மலையின் மேலேறிக் கொண்டிருந்தேன். அந்த கோபுரத்தை அடைய ஆறு மைல் தூரம் இருந்தது. நான் கோபுரத்தைக் காணும் அளவிற்கு, ஆறு மைல் தூரம் வரைக்கும்

மூடுபனி மறைந்தது என்பதைக் குறித்து சற்று யோசித்துப் பாருங்கள் !

146. நான் ஒரு கையில் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு, மற்ற கையை உயர்த்தின வாறே, அந்த தொலை பேசி கம்பியைத் தேடி நடக்கத் தொடங்கினேன், அந்த தொலைபேசி கம்பி திரு. டென்டனின் அறைபிலிருந்து மரங்களின் வழியாக கீழே கொண்டு வரப்பட்டிருந்தது. அவர் தம் மனைவியிடம் மலையிலிருந்து பேசுவதற்காக இந்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த தொலைபேசி கம்பியை நாட்ட அவருக்கு நான் வசந்த காலத்தில் உதவி செய்தேன், நான் கையை உயர்த்தினவாறு, 'தேவனே, அந்த கம்பியை நான் தொடும்படி செய்யும்'' என்று ஜெபித்தேன். கையையுயர்த்திக் கொண்டேயிருந்தால் அது இரணமாகி விட்டது. அதிக களைப்பும் ஏற்பட்டது. அதை என்னால் உயர்த்திக் கொண்டேயிருக்க முடிய வில்லை. எனவே துப்பாக்கியை இந்த கையில் பிடித்து மறு கையையுயர்த்தினேன். அந்த தொலைபேசி கம்பியை காணத்தவரக்

கூடாது என்பதற்காக, இரண்டு அடி பின்னால் எடுத்து வைத்து, கையையுயர்த்தி, நடக்கத் தொடங்குவேன். இப்படியாக நடந்து கொண்டே சென்றேன். இருட்டாகி விட்டது. காற்று பலமாக அடிக்கத் தொடங்கினது. நான் ஒரு மரக்கிளையை பிடித்து, "இது தான்'' என்பேன், பரர்த்தால் அது தொலைபேசி கம்பியாயிருக்காது.

147. என்னால் முடியாது என்று முயற்சியை கைவிட எத்தனித்த நேரத்தில் என் கை ஏதோ ஒன்றின் மேல் பட்டது.. ஓ. என்னே! நான் காணாமற் போனபோது, கண்டுபிடிக்கப்பட்டேன். அந்த தொலைபேசி கம்பியை நான் இறுகப் பிடித்துக் கொண்டேன். நான் துப்பாக்கியை கீழே வைத்து விட்டு. தொப்பியை கழற்றி, அங்கு நின்று. "ஓ. தேவனே, காணாமற் போன பிறகு கண்டுபிடிக்கப்படும் போது, எத்தகைய நல்லுணர்வு ஏற்படுகின்றது! இந்த தொலை பேசி கம்பியின் மறுமுனையை அடையும் வரை இதை நான் விடமாட்டேன். நான் இறுகப் பிடித்துக் கொள்வேன். அது என்னை

என் அருமையானவர்களிடம் வழி நடத்திச் செல்லும். அங்கு என் மனைவியும் குழந்தையும் நான் எங்கிருக்கிறேன் என்று அறியாமல் திகைத்து, தீ மூட்டுவது எப்படியென்று அறியாமல், என்ன செய்வதென்று பதறிப் போயிருப்பார்கள். காற்று பலமாக அடித்துக் கொண்டிருக்கிறது. மரக்கிளைகளும் முறிந்து விழுந்திருக்கும்'' என்றேன். அந்த கம்பியை நான் விடவே யில்லை. அதை இறுகப் பிடித்துக் கொண்டேன். அது என் அருமையானவர்கள் இருந்த இடத்திற்கு என்னை வர் நடத்தினது.

148. அது ஒரு பயங்கரமான அனுபவம். காருமற் போன நான் மீண்டும் என் வழியைக் கண்டு பிடித்தது ஒரு பெரிய அனுபவம். ஆனால் அது அவ்வளவு முக்கியமல்ல. ஒரு நாள் நான் பாவத்தில் மூழ்கி காணாமற் போனேன். ஏதோ ஒன்றைக் கண்டு பிடிக்க நான் ஒவ்வொரு சபைக்கும் சென்றேன், நான் ஏழாம் நாள் ஆசரிப்போரிடம் சென்றேன். அவர்கள், ''ஓய்வு நாளைக் கைக்கொள். மாமிசம் புசிப்பதை நிறுத்தி விடு'' என்றனர்.

நான் முதலாம் பாப்டிஸ்டு சபைக்குச் சென்றேன். அவர்கள், "நீ எழுந்து தின்று, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதாக அறிக்கையிடு. அப்பொழுது நாங்கள் உனக்கு ஞானஸ்நானம் கொடுப்போம்" என்றனர். அங்கெல்லாம் ஒன்றுமேயில்லை. ஆனால் ஒரு சிறிய நிலக்கரி கொட்டி வில் என் கரங்களையுயர்த்தி ஜெபித்த போது, நான் ஏதோ ஒன்றைப் பிடித்துக் கொண்டேன். அதை இப்படி கூறலாம் - ஏதோ ஒன்று என்னைப் பிடித்துக் கொண்டது. அது தான் ஜீவ கம்பி (Life Line), வழிகாட்டி. அவர் இது வரைக்கும் என்னைப் பாதுகாப்பாக நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். அந்த கம்பியிலிருந்து என் கையை நான் எடுத்து விடப்போவதில்லை. என் கரங்களால் அவரைப் பிடித்து கொண்டிருக்கிறேன் பிரமாணங்கள், கோட்பாடுகள், ஸ்தாபனங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். நானோ வழிகாட்டியை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு

விலையேறப் இபற்றதாயுள்ள இப்பூமியிலுள்ள அனைத்தும், பரலோகத்தி பள்ள அனைத்தும் இக்கம்பியின் முடிவில் தான் உள்ளன. இவ்வளவு தூரம் அவர் என்னைப் பாதுகாப்பாக கொண்டு வத்திருக்கிறார். எஞ்சயுள்ள வழியில் செல்வதற்கும் நான் அவரையே நம்பியிருக்கிறேன். "பரிசுத்த ஆவியாகி அவர் வரும் போது, உங்களை எல்லா வெளிச்சத்திற்கும் நடத்துவார்."

149. நண்பர்களே, அந்த பரிசுத்த ஆவியானவர் இன்று நான் உள்ள நிலை வரைக்கும் என்னை வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். அவர் என்னை இந்நிலைக்கு கொண்டு வந்திருக்இறார். அவரை நான் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். இவ்வுலகிற்கும், மேலேயுள்ள மறு உலகிற்கும். அவர் ஒருவர் மாத்திரமே வழிகாட்டியென அறிந்திருக்கிறேன். நான் வேட்டைக்குச் செல்லும் போது அவரே எனக்கு வழிகாட்டி. நான் மீன் பிடிக்கச் செல்லும் போது, அவரே எனக்கு வழிகாட்டி.

யாருடனும் நான் பேசும் போதும் அவரே எனக்கு வழிகாட்டி. நான் பிரசங்கம் செய்யும் போது, அவரே எனக்கு வழிகாட்டி, நான் உறங்கும் போது, அவரே எனக்கு வழிகாட்டி.

150. நான் மரிக்கும் போது, அவர் அந்த நதியில் நின்று கொண்டு, என்னை அதன் வழியாக வழி நடத்துவார். நான் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்... உமது தடியும் என்னைத் திருத்தி, நதியைக் கடக்க வழி நடத்தும். நாம் ஜெபம் செய்வோம்.

---



# அணில்கள் சிருஷ்டிக்கப்படுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 129-150

இதைக் கூறுவதால் மன்னிக்கவும், அன்றொரு நாள் அந்த காடுகளில் உட்கார்ந்து கொண்டிருந்த போது (தேவன் என் நியாயாதிபதி, நான் தவறுரைத்தால் இந்த பிரசங்க பீடத்திலேயே விழுந்து மரிக்கக் கூடும்). அந்த வேதவாக்கியம். என் வாழ்நாள் முழுவதும் புதிராக இருந்தபோது.... அன்று காலை அந்த காடுகளில் நான் உட்கார்ந்து கொண்டு அதைக்குறித்து சிந்தனை செய்து கொண்டிருந்த போது, அந்த சமயம் என்னுடன் பேசினது. அவர், "அந்த வேதவாக்கியம், மற்றெல்லா

வேதவாக்கியங்களைப் போல் உண்மையானது'' என்றார்.

நான், “அது எப்படி இருக்க முடியும்?'' என்று நினைத்தேன்.

அவர், “நீ....'' என்றார். நான் சொன்னேன்....அவர், “பேசு அது அப்படியே நிறைவேறும். சந்தேகப்படாதே'' என்றார்.

நான் காடுகளில் உட்கார்ந்து கொண்டு அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். மூன்று நாட்களாக அணில்கள் ஒன்றும் அங்கில்லை, ஒரு அணிலும் இல்லை. நான் காட்டத்திமரம் அடர்த்தியாக வளர்ந்துள்ள இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், அணில்கள் அங்கு வருவதேயில்லை.... அணில் வேட்டையாடும் எவரும், அவை காட்டத்திமரத்தில் இருப்பதில்லை என்பதை அறிவர், நான் அங்கு

உடகார்ந்து கொண்டிருந்தேன், காற்று பலமாக அடித்துக்கொண்டிருந்தது, அது காலை சுமார் பத்து மணியாக இருந்தது, நான் மறுபடியும் யோசித்தேன்.

அப்பொழுது அந்த சத்தம், "நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்டது போல, உனக்கு அணில்கள் தேவைப்படுகின்றன" என்றது.

"அந்த சத்தம் எப்பொழுதுமே என்னிடம் உண்மையைக் கூறி வந்துள்ளது, ஆனால் இது விசித்திரமாயுள்ளதே" என்று எண்ணி, நான் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து எழுந்து, "என்னுடன் பேசிக்கொண்டிருந்த நபர் எங்கே?" என்று சுற்று முற்றும் நோக்கினேன், அங்கு ஒன்றுமே காணப்படவில்லை. காற்று மாத்திரம் பலமாக

அடித்துக்கொண்டிருந்தது. "நான் ஒருக்கால் உறங்கப் போய், சொப்பனம் கண்டேனா?" என்று எண்ணினேன். இல்லை, நான் உறங்கவில்லை. நான் மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு கவனித்துக்கொண்டிருந்தேன். நான் காலை பத்து மணியளவில் சகோ. உட், சகோ. சாத்மன் அவர்களை அங்கு சந்திக்க வேண்டியவனாயிருந்தேன். அங்கு விவசாயிகள் வேலை செய்து கொண்டு, சோளத்தை சேகரித்துக்கொண்டிருந்தனர்.

அந்த சத்தம் மறுபடியும், "நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், உனக்கு வேட்டை பொருள் அவசியம். உனக்கு எத்தனை வேண்டும்? என்றது.

நான் அதிகமாக கேட்க கூடாதென்று நினைத்து - நான் மூன்று அணில்கள் கேட்கப்போகிறேன் என்று மனதில்

எண்ணி, "எனக்கு மூன்று சிவப்பு நிற இளம் அணில்கள் வேண்டும்" என்றேன்.

அவர், "அப்படியானால், அதைக்குறித்து பேசு" என்றார்.

"நான் மூன்று சிகப்பு நிற இளம் அணில்களைப் பெறப் போகிறேன்" என்றேன்.

அவர், "எந்த வழியாக அவை வரவேண்டும்?" என்று கேட்டார்.

"நல்லது, நான் இத்தனை தூரம் சென்று விட்டேன். ஏதோ ஒன்று என்னிடம் இங்கு பேசிக்கொண்டிருக்கிறது" என்று எண்ணினேன் - நான் பேசுவதை நீங்கள் கேட்பது போல், பரலோகத்தின் தேவன், இந்த வேதாகமம் என் இருதயத்தின் மேல் இருக்கும் இந்நேரத்தில், அது உண்மையென்று அறிவார். அவர்... நான்,

“நல்லது...” என்று நினைத்து, ஒரு கேலித்தனமான இடத்தை தேர்ந்தெடுத்தேன். அது தொங்கிக்கொண்டிருந்த ஒரு உலர்ந்துபோன கிளை (என் துப்பாக்கி உள்ள இடத்திலிருந்து சுமார் ஐம்பது கெஜதூரம்).

நான், “முதலாம் அணில் அங்கிருக்க வேண்டும்” என்றேன். அது அங்கிருந்தது.

என் கண்களை நான் துடைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். (என் தலையைத் திருப்பினேன்). “ஒரு தரிசனத்தை நான் சுட விரும்பவில்லை” என்று நினைத்தேன். நான் மறுபடியும் திரும்பிப் பார்த்தேன், அந்த அணில் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. நான் ஒரு தோட்டாவை துப்பாக்கிக்குள் போட்டு குறி வைத்தேன். அந்த சிகப்பு சிற இளம் அணிலின் கறுப்பு கண்ணை என்னால்

காண முடிந்தது. “நான் ஒருக்கால் உறங்கிக் கொண்டிருக்கிறேனா, இன்னும் சில நிமிடங்களில் நான் எழுந்து விடுவேன். நான் அதைக்குறித்து சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறேன்” என்று நினைத்தேன். நான் துப்பாக்கியை சரிமட்டமாக வைத்து, அணிலைச் சுட்டேன். அது கிளையிலிருந்து கீழே விழுந்தது. “எனக்குத் தெரியவில்லையே. அதை சென்று பார்க்க வேண்டுமா?” என்று நினைத்தேன். நான் அங்கு நடந்து சென்றேன். அந்த அணில் அங்கு கிடந்தது. அதை நான் கையிலெடுத்தேன். இரத்தம் அதிலிருந்து வடிந்து கொண்டிருந்தது. ஒரு தரிசனத்துக்கு இரத்தம் வடியாது என்று உங்களுக்குத் தெரியும். அதை நான் கையிலெடுத்தேன். அது ஒரு அணில். என் உடல் முழுவதும் மறத்துப்போனது.

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். “தேவனே, அது நீர்தானா?” என்றேன். நான், “இதற்காக உமக்கு நன்றி. நான் சென்று....” என்றேன்.

அவர், “நீர் சொன்னாய்! நீ சொன்னதை சந்தேகப்படுகிறாயா? உனக்கு மூன்று வேண்டும் என்று கூறினாய். அடுத்தது எங்கிருந்து வர வேண்டும்?” என்று கேட்டார்.

“நான் சொப்பனம் கண்டு கொண்டிருந்தால் தொடர்ந்து சொப்பனம் காண்பேன்” என்று எண்ணினேன்.

நான் சொன்னேன்... நான் மரத்தின் அருகிலுள்ள ஒரு பழைய கம்பத்தை தேர்ந்தெடுத்தேன். அதன் மேல் விஷமுள்ள பசுங்கொடி ஒன்று படந்திருந்தது. அதில் ஒரு அணிலையும் நீங்கள் ஒருக்காலும் காணமுடியாது. நான் “அடுத்த அணில் விஷமுள்ள அந்த

கொடியிலிருந்து வரவேண்டும்'' என்றேன். அப்பொழுது ஒரு சிகப்பு நிற இளம் அணில் அங்கு உட்கார்ந்து கொண்டு, என்னையே பார்த்துக்கொண்டிருந்தது. நான் துப்பாக்கியை கீழே வைத்துவிட்டு என் கண்களைப் பிசைந்தேன். நான் மறுபடியும் திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தேன்... அது தலையை பக்கவாட்டில் சாய்த்த வண்ணம் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்த அணிலை சுட்டு வீழ்த்திவிட்டு, வீடு செல்லப் புறப்பட்டேன்.

அப்பொழுது அவர், "நீ 'மூன்று' கேட்டாயே, நீ சொன்னதை சந்தேகிக்கிறாயா?'' என்றார்.

நான், "இல்லை, ஆண்டவரே, நான் சொன்னதை சந்தேகிக்கவில்லை. ஏனெனில் நீர் அதை உறுதிப்படுத்துகிறீர்'' என்றேன்.

இந்த ஒரு வேதவாக்கியம் எனக்குப் புதிராயிருந்தது: “ ‘நான் சொன்னால்’ என்றல்ல, ‘நீ சொன்னால்’ ” இயேசு சொன்னால் என்றல்ல நீயே அதை சொன்னால்.

“எப்படியோ அந்த வாய்க்காலுக்குள் நான் நுழைந்து விட்டேன். அவர் இங்கிருக்கிறார் என்றறிவேன். எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டது போல இருக்கிறது. இதை இன்னும் அதிக கேலித்தனமாக்குகிறேன்” என்றேன்.

நான், “ஒரு சிகப்பு அணில், அந்த மலையிலிருந்து கீழே இறங்கி இந்த வழியாக வந்து, என் அருகில் வந்து, இங்கிருந்து புறப்பட்டு சென்று அந்த கிளையின் மேல் உட்கார்ந்து அந்த விவசாயியை நோக்க வேண்டும்” என்றேன். நான் உரைத்தப்படியே, அது மலையிலிருந்து கீழே இறங்கி வந்து,

இங்கிருந்து புறப்பட்டு அங்கு சென்று உட்கார்ந்து, அந்த விவசாயியை நோக்கினது. அதை நான் சுட்டேன்.

சாத்தான் என்னிடம், “உனக்குத் தெரியுமா, காடு இப்பொழுது அணில்களால் நிறைந்துள்ளது” என்றான். நான் பன்னிரண்டு மணி வரைக்கும் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தேன். வேறு ஒரு அணிலையும் நான் காணவில்லை. அது எதைக் காண்பிக்கிறதென்றால், தேவன்... அவரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர்.

★★★★★

# இந்த மலையைப் பார்த்துப் பேசு



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: இந்த மலையைப் பார்த்துப் பேசு, 59-1123

*60. ஒரு சில வாரங்களுக்கு முன்பு, கடந்த இலையுதிர் காலத்தில், ஒரு நாள், இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பாக சிறிது ஓய்வு எடுப்பதற்காக நான் அணில் வேட்டையாடிக் கொண்டிருந்தேன். இப்பொழுது, நமது தேசத்தில், அது - ஏறக்குறைய அவர்கள் எல்லாருமே முயல் மற்றும் அணில்களை வேட்டையாடுகிறார்கள். நான் அதைச் செய்து கொண்டிருந்ததற்கான காரணம் என்னவென்றால், இந்தக் கூட்டத்துக்கு வருவதற்கு முன்பாக கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காகத் தான். திரு. சாத்மன் அவர்கள் அக்காலையில் என்னோடு இருந்தார்; அவர் எங்களை சந்திப்பதற்காக கனடாவிலிருந்து வந்து, எங்களோடு கொஞ்ச காலமாக தங்கியிருந்தார். அவர் ஒரு டிரெய்லர் வண்டியை எடுத்து, அவரும் இன்னும் சில நண்பர்களும் எங்களுக்கு அருகிலேயே வாழ்ந்து வருகிறார்கள்...*

எனவே, நாங்கள் திரு. உட் அவர்களோடு ஒன்றாக அணில் வேட்டையாடிக் கொண்டிருந்தோம். மேலும் அவரும் கூட அங்கே எனது பக்கத்திலேயே வசித்து வருகிறார், அவரும் என்னுடைய நெருங்கிய நண்பராக இருந்து வருகிறார். அப்போது, நாங்கள் சென்று வேட்டையாடிக் கொண்டிருந்தோம். அது நான் வேட்டையாட வேண்டிய கடைசி நாளாகும், ஏனெனில் அதற்கடுத்த ஞாயிறு, நான் வயோமிங் போவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிறகு செவ்வாய் கிழமையில் அந்த சீசன் (பருவ காலம்) முடிவடைகிறது. அப்போது, அது சனிக்கிழமையாக இருந்தது. நான் இப்பருவ காலத்தில் இந்தியானா மாகாணத்தில் அணில் வேட்டைக்கு போகக் கூடியதாயிருந்த கடைசி வேளை அதுவாயிருந்தது. ஓ, நாங்கள் அதிக அளவு வேட்டையாடினோம், அங்கே அதிகமாக வேட்டையாடிக் கொண்டிருந்தோம். இந்தியானாவில் அணில் வேட்டையாடுவதற்காக அநேக வேட்டைக்காரர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாரும் சிதறி ஆங்காங்கே (வேட்டையாடுவதற்காகச்) சென்று விட்டார்கள்.

*61. அந்தக் காலை வேளையானது பெருங்காற்று வீசுகிற, காற்றோட்டமுள்ள மோசமான ஒரு காலை நேரமாக இருந்தது, அணில்கள் அந்த நாட்களில் வெளியே வராது. நான் காடுகளுக்குள் போனேன், ஏறக்குறைய ஒன்பது மணி ஆகும் வரையில், நான் நடந்து கொண்டேயிருந்தேன், அணில்கள் எதையும் பார்க்க முடியவில்லை. அந்தச் சிறிய ஓடையின் கரையின் மேல் சென்றேன்; அப்போது இந்தியானா மிகவும் குளிராக மாறிக் கொண்டிருந்தது. ஏறக்குறைய அக்டோபர் முதலாம் தேதி என்று நினைக்கிறேன்; சரியாகச் சொன்னால், அது அக்டோபர் 8ம் தேதியாக இருந்தது. நான் சில காட்டத்தி மரங்கள் (sycamore trees) வழியாகச் சென்றேன். அணில்கள் காட்டத்தி மரங்களில் வாழ்வதில்லை; அவைகள் பீச் மரங்களிலும், ஓக் மரங்களிலும், மற்ற மரங்களிலும், அதிக பசுமையாயிருக்கிற இடங்களிலிருக்கும் தடித்த மரங்களிலும் வசிக்கின்றன. நான் ஒரு சிறு ஓடை பக்கமாக நடந்து சென்றேன், ஒரு சிறு முகடின் பக்கத்தில் ஒரு அணிலைக் கண்டதாக நான் எண்ணினேன். அங்கே வெளியில் சோள வயல்கள் இருந்தன, விவசாயிகள் தங்களுடைய சோளக்கதிர்களை சேகரித்துக் கொண்டிருந்தனர்.*

அங்கே வெளியே அவர்களில் அநேகர் சோளக்கதிர்களை சேகரித்துக் கொண்டிருந்தனர். “நல்லது,” நான், “இக்காலையில் ஒரு அணிலும் இல்லை” என்றேன். ஒரு பெரிய வெட்டுக்கிளி புதரைத் தவிர அங்கே எதுவுமில்லை, அங்கே அணில் வசிக்கும்படியாக எதுவுமே இல்லை. அந்த வாதுமைக் கொட்டை மரங்களில் இலைகள் எல்லாம் போயிருந்தன, அவைகள் இலைகளற்று வெறுமையாக தோற்றமளித்தன, அங்கே எந்த அணிலுமே இருக்கவில்லை. நான், “நல்லது, நான் சற்று இங்கே கொஞ்சம் உட்கார்ந்து கொண்டு, ஒருவிதமாக வெதுவெதுப்பாக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்” என்றேன். ஏனெனில் எனக்கு வெறுமனே ஒரு சட்டை தான் இருந்தது, மேல் கோட் இல்லாதிருந்தது. நான் இரண்டு மரங்களுக்கு இடையில் அமர்ந்து கொண்டேன், அங்கே சூரிய வெளிச்சம் என் மேல் பிரகாசித்தது, (எனவே) என் காலை மற்ற மரம் பக்கமாக சற்று நகர்த்தி, முழுவதும் வசதியாக உள்ள நிலையில் உட்கார்ந்து கொண்டேன். நான், “ஒருவேளை சிறிது தூங்கலாம்” என்று எண்ணினேன். என்னிடம் அலாரம் உடைய ஒரு சிறு கைக்கடிகாரம் இருந்தது, நான், “நான் தூங்க நேரிட்டால், அலாரம் அடித்து என்னை

எழுப்புவதற்காக, இப்பொழுது இக்கைக்கடிகாரத்தில் நேரத்தை செட் செய்து விடுகிறேன், (ஏனென்றால்) நான் குறித்த நேரத்தில் திரு. உட்டையும், திரு. சாத்மனையும் கண்டு பிடித்தாக வேண்டும்" என்று நினைத்தேன், ஏனென்றால் அவர்கள் வேறொரு காட்டில் மிக தொலைவிலுள்ள பாதையில் இருந்தனர். எனவே நான் என்னுடைய சிறு கடிகாரத்தில் அலாரம் செட் செய்து வைத்தேன் - சரியாகச் சொன்னால் என்னுடைய சிறு கைக்கடிகாரத்தில் அலாரம் செட் செய்து விட்டு, அந்த மரத்தின் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

62. நான் ஒருவிதமாக என்னைத் தானே வெதுவெதுப்பாக்கும்படியாக தீவிரிக்கையில், அந்த வேதவாக்கியம் மீண்டும் என்னிடம் வந்தது, "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாயிருந்து, என்ன கூறினாலும் அது சம்பவிக்கும், நீங்கள் சொன்னபடியே ஆகும்." "நல்லது," நான், "நான் அந்த வேதவாக்கியத்தைக் குறித்து எதையும் அறிந்திராத காரணத்தினால், நான் அதன் பேரில் பிரசங்கிக்க கூடாதிருக்கும் போது, ஏன் அந்த வேதவாக்கியம் தொடர்ந்து என்னிடத்தில் வந்து கொண்டிருக்கிறது? நான் ஒரு சபை முன்பாக சென்று அந்த வேதவாக்கியத்தை விளக்கிக்

கூறும்படியாக முயற்சிக்கவே முடியவில்லையே" என்று எண்ணினேன். நல்லது, நான் அங்கே சிறிது உட்கார்ந்தவாறு, "அதற்கு ஒரேயொரு காரியம் தான் உண்டு. நான் அந்தப் பாடத்தின் பேரில் எப்பொழுதாவது பிரசங்கிக்க அழைக்கப்பட்டால், நான் அதைச் செய்யும் வழி இதோ இருக்கிறது. நான், 'இயேசு சீஷர்களிடம் தான் அதைக் கூறினார், அவர்களுக்குத் தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்தார். பாவ பரிகாரம் செய்யப்பட்டதற்கும் ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு அது சம்பவித்தது. எனவே அது அந்தப் பரிகாரத்தில் இல்லாமல் இருந்திருக்குமானால், அது அந்தப் பரிகாரத்தின் மறுபக்கத்தில் இருந்தது' என்று கூறுவேன். எனவே யாராவது எப்பொழுதாவது என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்பார்களானால், அது அந்தப் பரிகாரத்தின் மறுபக்கத்தில் தான் இருந்தது என்று நான் அவர்களிடம் கூறுவேன்; எனக்குத் தெரிந்த ஒரே காரியம் அதுதான். ஏனென்றால் இயேசு அப்பொழுது இன்னும் ஜீவித்துக் கொண்டிருந்தார்; பரிகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை, அவர் இன்னும் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்படவில்லை, அப்பொழுது நாம்

அவருடைய தழும்புகளால் குணமடையவுமில்லை. எனவே அந்தப் பரிகாரத்தின் மறுபுறத்தில் தான் அவர் அந்த வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார்" என்று எண்ணினேன்.

63. அப்போது, திடீரென்று ஏதோவொன்று என்னிடம் பேசி, "தீர்க்கதரிசிகளைக் குறித்து என்ன?" என்றது. நல்லது, அப்போது அது எனக்கு வெளிப்படையாகத் தொடங்குவதை நான் காண ஆரம்பித்தேன். "நீ அங்கே கூட்டத்தில் நின்று கொண்டிருக்கும் போது, அக்கூட்டத்தில் சம்பவித்ததைக் குறித்து நீ என்ன நினைக்கிறாய்? நீ அந்த ஜனங்களை அறிந்திருக்கிறவன் என்று நினைக்கிறாயா? நீ குறிப்பிட்ட - குறிப்பிட்ட ஒரு காரியத்தைச் செய்யப் போகிறாய் என்றும், ஒரு குறிப்பிட்ட - குறிப்பிட்ட காரியம் உனக்கு சம்பவித்திருக்கிறது என்றும், ஒரு குறிப்பிட்ட - குறிப்பிட்ட காரியம் உனக்கு சம்பவிக்கும் என்றும் அந்த ஜனங்களிடம் கூறி, அதை முன்னுரைக்கக்கூடியவன் நீ தான் என்று நினைக்கிறாயா? அதைக் கூறிக் கொண்டிருப்பது நீ தான் என்று நினைக்கிறாயா?" ஓ, என்னே! அது எனக்கு மிகவும் அதிக முக்கியம்

வாய்ந்ததாக உள்ளது, அது ஒருபோதும் என்னை விட்டுப் போய் விடவில்லை.

மேலும் நான், "கர்த்தாவே, அது நிச்சயமாக நானில்லை. அது நீரே" என்று எண்ணினேன்.

"நல்லது அப்படியானால், பேசிக் கொண்டிருப்பது நீ என்று நினைக்கிறாயா?"

"இல்லை."

*64.* "அது தீர்க்கதரிசிகள் பேசிக் கொண்டிருந்தது என்று நினைக்கிறாயா? தீர்க்கதரிசிகள் அவ்வாறே பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டிருந்தார்கள் என்ற பாடத்தின் பேரில் நீ பிரசங்கிக்கவில்லையா, அது அவர்கள் பேசுவதல்ல; அது பரிசுத்த ஆவியானவர் அவர்களிலிருந்து சத்தமிடுவதல்லவா? அப்படியானால் நீ அபிஷேகத்தின் கீழிருந்து நீ எதைக் கூறுகிறாயோ, அது நீ கூறுவதல்ல; அது பரிசுத்த ஆவியானவர் கூறுவதாகும்."

*65.* "நல்லது," நான், "அது... அது உண்மை. அந்த நபர் பரிகாரத்தினூடாக, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடன் மிகவும் நெருங்கி ஒரு பரிமாணத்திற்குள் ஜீவிக்க

முடிகிறது, அவன் இயேசுவின் இரத்தத்தினால் முழுவதுமாக சுற்றப்பட்டிருக்க முடிகிறது, அது அவன் பேசுவதல்ல, இந்தக் காரியங்களைப் பேசிக் கொண்டிருப்பது பரிசுத்த ஆவியானவர் தான்” என்று நினைத்தேன்.

66. என்னுடைய முழு ஜீவியத்திலும் இதற்கு முன்பு ஒருபோதும் நான் கொண்டிராத வகையில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்மேல் இறங்கும் அளவுக்கு நான் அதைக் கூறினேன், நான் அவ்விதம் கூறினது போல அதற்கு மேலும் கூறினது கிடையாது. தேவன் அதை அறிவார். நான் என்னுடைய காலூன்றி எழுந்து நின்றேன்; இது என்னுடைய நினைவில் நிலைத்து நின்றது. ஏதோவொன்று என்னிடம், “இப்பொழுது, இது தான் உன்னுடைய புது ஊழியத்தின் ஆரம்பம். இப்பொழுது, நீ விரும்புகிற எதை வேண்டுமானாலும் கேள், அது உனக்குக் கொடுக்கப்படும்” என்றது.

67. நான் அங்கே நின்றேன். நான்-நான் ஒரு மத வெறி பிடித்தவனாயிருக்க விரும்பவில்லை, நான்-நான் தெளிந்த புத்தியுடனும் (*sane*), நீதியுடனும், உத்தமத்தோடும், உண்மையுடனும் இருக்கவே விரும்புகிறேன் என்பதை தேவன் அறிவார். நல்லது இப்பொழுது, எனக்கு ஐம்பது

வயதாகிறது, நான் போய் அவரை சந்திப்பதற்கு அதிக காலமில்லை. நான் இந்த உலகத்தை விட்டு போவதற்கு முன்பு, எல்லாம் முற்றிலுமாக சரியாக உள்ளது என்பதை அறிந்து கொள்ளவே விரும்புகிறேன். நான், "நான் ஏதோவொன்றைக் குறித்துப் பொறுப்பற்ற விதமாய் இருக்க விரும்பவில்லை, நான் ஒருக்கால்..." என்று எண்ணினேன். இப்பொழுது, நான் என்னுடைய விரலைக் கடித்துக் கொண்டு, "நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை, நான் இதைக் குறித்து கனவு காணவில்லை, எனவே ஏதோவொன்று தவறாயுள்ளது" என்று கூறினேன். என்னுடைய முகமும் எல்லாமுமே மிகவும் உணர்ச்சியற்று மரத்துப் போனது போல் ஆகி விட்டன. நான், "நான் இதை விட்டு என்னை நானே விடுவித்துக் கொள்ள கூடாதிருக்கிற ஒரு நிலைக்குள் நான்-நான் வரும் வரை, நான் ஒருக்கால் வெறுமனே இதைக் குறித்து அதிகமாக தியானித்துக் கொண்டிருக்கலாம்" என்று நினைத்தேன். மேலும், வழக்கமாக நான் ஆழமான அபிஷேகத்துக்குள் வரும்போது, அதைத் தொடர்ந்து ஒரு தரிசனமும் வருவதுண்டே என்று நான் நினைத்தேன். நான், "நல்லது,

நான்-நான் இங்கே சற்று ஒரு நிமிடம் காத்திருப்பேன்" என்று நினைத்தேன்.

68. நான்-நான் என் கரங்களை இவ்விதமாய் அசைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினேன், ஏதோவொன்று, "நீ என்ன விரும்பினாலும் அதைச் சொல், அது உனக்குக் கொடுக்கப்படும்" என்றது.

நான் காத்திருந்து கவனித்துக் கேட்டேன்; நான், "அது... ஐயா, நீர் எங்கேயிருக்கிறீர்?" என்று நினைத்தேன்.

அது மீண்டும், "நீ என்ன விரும்பினாலும் அதைக் கேள், அது உனக்குக் கொடுக்கப்படும். நான் செய்யப் போகும் காரியங்களை, உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறேன்" என்று கூறுவதைக் கேட்டேன்.

69. நானோ, "ஆனால் நான் என்ன செய்ய வேண்டும்..." என்று கூறினேன். நான், "நான் யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்?" என்று நினைத்தேன். நான்-நான் எனக்குப் பித்துப் பிடித்ததைப் போன்று உணர்ந்தேன். நான், "நான் யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்? நான் ஒரு ஆளையும் காணவில்லையே; அந்த **ஒளி** எங்கே? வழக்கமாக அதுதான் பேசும். இங்கே அந்த **ஒளி**

இல்லையே. நீர் யார்? எங்கேயிருக்கிறீர் - உமக்கு என்ன வேண்டும்?" என்று நினைத்தேன்.

70. ஏதோவொன்று, "நீ என்ன விரும்பினாலும் அதைக் கேள்" என்று கூறுவதாக நினைத்தேன். அது உண்மை. "நீ விரும்புவதைக் கேள்" என்று எழுதப்பட்டுள்ள மாற்கு 11:23 ஆகிய அந்த வேதவாக்கியத்தைக் குறித்து நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நான், "நல்லது, நான் எதைக் கேட்பேன்? இங்கே வியாதிப்பட்ட ஜனங்கள் யாருமேயில்லை. நான் என்ன செய்யலாம்? இங்கே வெளியே எதுவுமேயில்லையே - ஒருக்கால், நான் அருகில் இருக்கிறேனா?" என்று நினைத்தேன். நான், "நான் என்ன கேட்கலாம்?" என்று கூறினேன்.

நீங்கள் என்னுடைய சத்தத்தை எவ்வளவு தெளிவாக கேட்கிறீர்களோ அவ்வளவு தெளிவாக ஏதோவொன்று, "நீ வேட்டையாடவில்லையா? உனக்கு வேட்டை மிருகம் எதுவும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டது.

71. நான், "அது உண்மை தான்" என்றேன். நான், "இது கர்த்தரா" என்று நினைத்தேன், நான், "நான்-நான் தவறான எதையாவது செய்திருந்தால், நீர் என்னை மன்னியும்" என்று கூறினேன். இப்பொழுது, அது மிகவும் மோசம்

அல்லவா? நீங்கள் தவறான எதையாகிலும் செய்திருந்தால். நான், "கர்த்தாவே, நான் தவறான எதையாகிலும் செய்திருந்தால், என்னை மன்னியும். ஆனால் இது நீரா? இந்த வேதவாக்கியத்தை என்னிடம் கொண்டு வர முயற்சிப்பது நீரா? நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் அந்த மற்ற உயர்ந்த படி நிலை இது தானா? நீர் எனக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்தீர், கூடாரக் கூட்டங்கள் தொடங்கப்படும் போது எங்கேயோவுள்ள ஒரு சிறு கட்டிடத்தில் நடக்கும் ஒரு கூட்டத்தில் அது உறுதிப்படுத்தப்படும் என்று அத்தரிசனம் கூறினது. அதற்குத் தான் நீர் வழிநடத்திக் கொண்டிருக்கிறீரா? கர்த்தாவே, அது அவ்வாறு இருக்குமானால், நான் உம்மை உம்முடைய வார்த்தையின் மூலம் அறிந்து கொள்வேன்" என்றேன்.

72. நான் சுற்று முற்றும் நோக்கி, "நடக்க இயலாத ஏதோவொன்றை நான் கண்டு பிடிப்பேன்" என்று நினைத்தேன். நான் அந்த வெட்டுக்கிளி புதரைக் கண்டுபிடித்தேன்; நான் சொன்னேன்... நான் வழக்கமாக 50 கெஜம் *(yard)* தூரத்தில் என்னுடைய பார்வையை செலுத்துவேன். நான்... கர்த்தர்... நான்

துப்பாக்கிக் குண்டல்ல, ஆனால் நான்-நான் என்னுடைய துப்பாக்கி 50 கெஜ தூரத்திலுள்ள முளையை (tack) சுடவில்லை என்றால், அது முடிந்து போய் விட்டது. எனவே அப்போது, நான்... நான் அணில்களைச் சுடுகிறேன், நான் ஒருபோதும் ஒரு அணிலையும் அதன் முதுகிலோ, அல்லது அதன் தலையிலோ சுட மாட்டேன்; நான் சரியாக அதைப் பார்த்து, ஒரு .22 ரக துப்பாக்கியைக் கொண்டு அதன் கண்ணில் சுட வேண்டியதாயிருந்தது. இப்பொழுது, அது அவ்வாறு சுடப்படாமலிருந்தால், அதைப் போக விட்டு விடு. எனவே அப்படியானால்...

73. நான், "அங்கே 50 கெஜ தூரம் உள்ளது" என்றேன், அது ஏறக்குறைய இந்தக் கட்டிடத்தின் குறுக்களவு தூரம் இருக்கும்; நான், "ஒரு சிகப்பு நிறமுள்ள இளம் அணில் அங்கு வந்து, அங்கேயுள்ள அந்த இலையுதிர்ந்த மரக்கிளையில் இருக்க வேண்டும், நான் சரியாக அதை இங்கேயிருந்து சுட வேண்டும்" என்றேன். அங்கே அந்த அணில் வந்தது. நான் துப்பாக்கியை எடுத்து, அந்த சிறு தொலைநோக்கியைக் கொண்டு அதனுடைய கண்ணை நோக்கிக் குறிபார்த்து, அதை சுட்டு,

வீழ்த்தினேன். நான் அதைக் காணும்படி (அருகில்) நடந்து சென்றேன்; நான், "அதில் இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது. ஒரு தரிசனத்திற்கு இரத்தம் வடியாது" என்று நினைத்தேன். நான்-நான் அதை உற்றுப் பார்த்து, அந்த அணிலைக் கையில் எடுத்து, அதைத் தொட்டுப் பார்த்தேன்; அது ஒரு உண்மையான அணில். நான் மிகவும் கலக்கமடைந்தேன். நான், "நல்லது, அது அப்படியே சரியாக சம்பவித்தது என்று உனக்குத் தெரியும், அவ்வளவு தான்; அது அப்படியே அவ்விதமாகவே சம்பவித்து விட்டதே" என்று நினைத்தேன்.

74. எனவே நான் நடக்கத் தொடங்கினேன், நான், "ஆனால் இங்கேயுள்ள இந்த வெட்டுக்கிளி புதரில் ஒரு அணில் இருக்குமா? நல்லது, அவைகள் அதோ பின்னாலுள்ள அந்தக் காடுகளில் தான் இருக்கும். அவைகள் இவ்விதமாக அங்கே போவதில்லையே, நான் காலை முழுவதும் வேட்டையாடிக் கொண்டிருக்கிறேனே" என்று நினைத்தேன். எனவே நான் அங்கே சிறிது நேரம் நின்றவாறு, நான், "கர்த்தாவே, அது நீராக இருக்குமானால், இரண்டு மூன்று சாட்சிகளால்

உறுதிப்படுத்தப்படும் என்று வேதம் கூறுகிறது, அது இரண்டாவது முறையாக சம்பவிக்க முடியாது" என்றேன். எனவே நான் அந்த மலை பக்கமாக நடந்து சென்று, உட்கார்ந்து கொண்டு, "இப்பொழுது, நான் இங்கே பித்துப்பிடித்தவனாக நடந்து கொள்கிறேனே" என்றேன். மேலும் நான், "நல்லது, இப்பொழுது நான்-நான் அப்படியே புறப்பட்டு வீட்டிற்குப் போய் விடலாம்" என்றேன். நான், "அது..." என்றேன். ஆனால் நான், "நான் அதை முயற்சி செய்வேன் என்று நம்புகிறேன்" என்று நினைத்தேன். நான், "அங்கே வேறொரு அணில் வந்து, சரியாக அந்த ஒரு கொத்து திராட்சைக் கொடிகளின் மேல் அமர வேண்டும்" என்றேன். நான் என்னுடைய விரலைக் கீழே போட்டு விட்டு, திரும்பிப் பார்த்தேன்; நான் ஒரு அணிலையும் பார்க்கவில்லை. நான், "நல்லது" என்று சொல்லி விட்டு, திரும்பிப் பார்த்து, "அங்கேயிருக்கும் அது என்ன?" என்று நினைத்தேன். என்னுடைய தொலைநோக்கியை எடுத்து, என்னிடமிருந்து 50 கெஜம் தூரத்தில் இருக்கிற ஒரு அணிலை நோக்கிப் பார்த்தேன். நான் அந்த அணிலைச் சுட்டேன். அதை எடுப்பதற்காக நடந்து சென்று, அது ஒரு தரிசனமா என்று பார்த்தேன், ஆனால் அது-அது

ஒரு தரிசனமல்ல; அது ஒரு அணிலாக இருந்தது. அவைகளை ஆர்வத்துடன் எடுத்துக் கொண்டேன். எனவே அவைகள்... நான்-நான் அந்த ஒன்றை எடுத்துக் கொண்டு, “ஓ என்னே!” என்று நினைத்தேன். நான் அப்படியே மிகவும் வேடிக்கையான உணர்வைப் பெற்றேன். நான், “இரண்டு, ஆனால் நீர் மூன்று என்று கூறினீரே” என்று நினைத்தேன்.

75. “நல்லது,” நான், “இது... கர்த்தாவே, இது நீர் என்று நான்-நான்-நான்-நான் ஒருவிதத்தில் விசுவாசிக்கிறேன். நீர் ஒருக்கால் இப்பொழுது ஜனங்களுக்காக ஏதோவொன்றை செய்யப் போகிறீர்; நீர் உமது ஜனங்களுக்கு உதவி செய்யப் போகிறீர். எனவே நான் உமக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன், நான்-நான் உமக்கு நன்றி கூறுகிறேன், ஐயா” என்றேன். நான் என்னுடைய தொப்பியைக் கழற்றி விட்டு, “நான்-நான் நிச்சயமாகவே உமக்கு நன்றி கூறுகிறேன், ஐயா. இப்பொழுது நான்-நான் உம்மை விசுவாசிக்கிறேன், நீர் உமது ஜனங்களுக்காக ஏதோவொன்றைச் செய்யப் போகிறீர், எனவே, அன்பு பிதாவே, நான்-நான் அதை நிச்சயமாக பாராட்டுகிறேன்” என்று

கூறிவிட்டு, "இப்பொழுது, நான் வீட்டிற்குப் போகிறேன்" என்றேன்.

அவரோ, "ஆனால் உனக்கு மூன்று தேவை என்று நீ சொன்னாயே" என்றார்.

76. "நல்லது," நான், "ஆம்" என்றேன். இப்பொழுது, எனக்குள்ளே ஏதோவொன்று இருப்பதைப் போன்று தோன்றினது. நான் ஒரு சத்தத்தையும் கேட்கவில்லை, ஆனால் எனக்குள்ளே இருக்கும் ஏதோவொன்று அதைக் கூறுகிறது. "நல்லது," நான், "நான் இந்த ஒன்றை மிக முக்கியமான ஒன்றாக செய்வேன், (அப்படியானால்) அது-அது-அது இயற்கைக்கு மேம்பட்ட ஏதோவொன்றாக இருக்க வேண்டும்" என்று நினைத்தேன். நான் வெளியே வயலில் நோக்கிப் பார்த்தேன்; அங்கே வயலின் அருகில், பெரிய வழுவழுப்பான மரம் ஒன்று தன்னுடைய பெரிய பக்க கிளைப்பகுதியை வெளியே நீட்டினபடி நின்று கொண்டிருந்தது. நான், "ஒரு இளம் அணில் அந்த கிளையின் மேல் போய், அதன் நுனிப்பகுதியில் உட்கார்ந்து கொண்டு, தங்கள் சோளப்பயிரைக் கொய்து கொண்டிருக்கிற அந்த விவசாயியை நோக்க வேண்டும்" என்றேன், அவர்கள் தங்களுடைய சோளப்பயிரின் மேல் தோலை நீக்கிக்

கொண்டிருந்தனர், மேலும் நான் தொடர்ந்து, "நான் சரியாக இங்கேயிருக்கும் இந்த மரத்திலிருந்தே அந்த அணிலைக் கொல்ல வேண்டும். அது அந்தவிதமாக இருக்க வேண்டும்" என்றேன்.

77. நான் ஒரு நிமிடம் அங்கு நின்றேன், அணில் எதுவுமில்லை, திரும்பிப் பார்த்தேன். ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் கடந்தன, எந்த அணிலும் இல்லை. நான், "நல்லது" என்றேன்... நான், "நல்லது, இதுவே போதுமானது. எப்படியும் நான் போக நேரமாகி விட்டது" என்று எண்ணினேன். நான் தொடர்ந்து, "நான் போவது நல்லது" என்றேன். நான் அங்கிருந்து நடக்கத் தொடங்கினேன்; நான் அவ்வாறு நடக்கத் தொடங்கின போது, ஏதோவொன்று என்னிடம், "ஆனால் நீ ஏற்கனவே அதை உரைத்து விட்டாய். மேலும் 'உன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், நீ சொன்னபடியே ஆகும்...' என்று வேதவாக்கியம் கூறுகிறதே" என்றது. அல்லேலூயா! ஒரு மரத்தின் பக்கவாட்டுப் பகுதிக்கு முன்பாக காத்துக் கொண்டிருந்தேன்; நான் அதற்கு அப்பாலும் நோக்கினேன், பின்பாகவும் நோக்கினேன்; அங்கே எந்த அணிலும்

இல்லாதிருந்தது. மேலும் பத்து நிமிடங்கள் காத்திருந்தேன், அணில் எதுவுமில்லை. நான், "ஒரு அணில் அங்கே எப்படி வெளியே வர முடியும்?" என்றேன். எனவே நான், "நல்லது, நான் அப்படியே தொடர்ந்து போவேன் என்று நினைக்கிறேன், நான் வீட்டிற்குப் போயாக வேண்டும், ஏனென்றால் இது திரு. சாத்மனையும் மற்றவர்களையும் அழைத்து வர வேண்டிய நேரம், எனவே நான் அப்படியே தொடர்ந்து போவேன்" என்றேன். நான் அவ்விதமாக அங்கிருந்து நடந்து செல்லத் தொடங்கினேன்.

(ஏதோவொன்று), "நீ அதை சந்தேகிக்கிறாயா?" என்றது. உங்களை எங்ஙனம் பயிற்றுவித்து உங்களுக்குக் கற்றுக் கொடுப்பது என்று தேவனுக்குத் தெரியும். "நீ சொன்னதை சந்தேகிக்கிறாயா?"

78. நான், "இல்லை, நான் சந்தேகிக்கவில்லை" என்றேன். நான் அதைச் சொன்ன மாத்திரத்தில், ஒரு இளம் அணில் அந்தக் கிளையை விட்டு வெளியே வந்து, அந்தக் கிளையின் நுனிப்பகுதிக்கு நடந்து சென்று, அந்த விவசாயிகளை நோக்கியபடி நின்றது. நான் சரியாக அங்கிருந்தபடி அதைச்

சுட்டேன், இப்படியாக எனக்கு மூன்று அணில்கள் கிடைக்கும்படி ஆனது. மேலும் நான், "இந்தப் பிரதேசத்தில் வேறொரு அணில் இருக்கிறதா என்று பார்க்கப் போகிறேன்" என்றேன். நான் திரு. சாத்மன் அவர்களையும் மற்றவர்களையும் அழைத்து வர ஏறக்குறைய மூன்று மணி நேரம் காலதாமதம் ஆகியிருந்தது, ஒருவருடைய சத்தத்தைக் கூட கேட்க முடியவில்லை. நான் வீட்டிற்குச் சென்று அவர்களிடம் கூறினேன். அது என்னை தொல்லைப்படுத்தினது. அதைக் குறித்து என்ன நினைக்க வேண்டும் என்றே எனக்குத் தெரியவில்லை.

79. ஏறக்குறைய இரண்டு வாரங்கள் கழித்து, நான் கென்டக்கி மாகாணத்தில் இருந்தேன், அங்கே அணில் வேட்டையாடும் பருவ காலம் அப்பொழுதும் இருந்தது, என்னுடைய நண்பர்களாகிய திரு. உட் அவர்களோடும் அவருடைய மைத்துனரோடும் அங்கே இருந்தேன். நான் அங்கே நின்று கொண்டிருந்தேன், நாங்கள் அந்தக் காலையில் சென்று வேட்டையாடிக் கொண்டிருந்தோம். ஓ, பெருங்காற்று அடித்துக் கொண்டிருந்தது, இலைகள் எல்லாம் மரங்களை விட்டு விழுந்து

விட்டன, அணில் வேட்டைக்கு அது ஒரு மோசமான நேரமாக இருந்தது. எனவே நாங்கள்... நல்ல வேட்டைக்காரர்களும் ஒரு நாளைக்கு ஒரு அணிலும் பிடிக்கவில்லை. அப்போது அவைகளைப் பிடிக்க நீங்கள் சிறு துப்பாக்கியை வைத்திருக்க வேண்டும், மேலும் நான் வேட்டை... (ஒலிநாடாவில் காலியிடம் – ஆசிரியர்.) "நீ அவைகளைக் கொண்டிருப்பாய்."

80. மேலும் நான், "இப்பொழுது, இங்கே அதைக் குறித்து எனக்கு - எனக்குத் தெரியாது. இக்காலையில், எதிர்பார்த்தபடி, (அணில்கள் கிடைப்பது) மிகவும் கூடாத காரியமாக உள்ளது, வருடத்தின் இந்த நேரத்தில் இங்கே எந்த அணிலுமே இல்லை. இது மிகவும் குளிராயுள்ளது, நாம் நிறைய ஆடைகளை அணிந்துள்ளோம்; நான் அப்படியே பயங்கரமாக குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கிறேன். அணில்களே இல்லையே" என்று எண்ணினேன். இலைகள் ஏறக்குறைய நிலத்தில் இந்த ஆழத்தில் இருந்தன. ஒரு மந்தைக் கூட்டம் மான்கள் அந்த வழியாக கடந்து சென்று கொண்டிருப்பதைப் போன்ற சத்தத்தை உங்களால் கேட்க முடியும்.

இப்படியிருக்க நான் அவ்விதமாக அதனூடாக நடந்து போய்க் கொண்டேயிருந்தேன், அப்பொழுது, “நீ என்ன விரும்பினாலும் அதைக் கேள்” என்ற காரியம் மீண்டும் என் நினைவில் வந்தது.

*81.* நான் நின்று என்னுடைய துப்பாக்கியை தரையில் வைத்து விட்டு, என்னுடைய தொப்பியைக் கழற்றி, “பரலோகப் பிதாவே, நான் இங்கே இந்த மலைகளில் இருக்கிறேன்; என்ன - இந்தக் காரியங்களைக் குறித்து என்ன? நீர் தான் என்னிடம் பேசிக் கொண்டிருக்கிறீரா? அது நீர்தானா, கர்த்தாவே? நீர் எங்கேயிருக்கிறீர்? நான் வழக்கமாக உம்முடைய ஒளியைக் காண்பேன். நீர் எங்கேயிருக்கிறீர்? என்னிடம் பேசும், கர்த்தாவே. நான் எதையாவது செய்ய வேண்டும் என்று நீர் விரும்பினால், நான் அதைச் செய்வேன். உம்முடைய பார்வையில் எனக்குக் கிருபை கிடைக்குமா? நான்... என்னோடு சற்று பேசும்” என்று கூறினேன்.

“நீ என்ன விரும்பினாலும் அதைக் கேள், அது உனக்குக் கொடுக்கப்படும்” என்றார்.

*82.* நான், “அது நீராக இருக்குமானால், இக்காலை வேளையில் எனக்கு மூன்று சாம்பல்

நிற அணில்கள் வேண்டும்" என்றேன். இந்தியானாவில் அது சிகப்பு நிறத்தில் இருக்கிறது. நான், "எனக்கு மூன்று அணில்கள் வேண்டும்" என்றேன்.

ஏதோவொன்று, "அவை எந்த வழியாக வர வேண்டும்?" என்று கேட்டது.

83. நான், "அதோ அது இருக்கிறது" என்று நினைத்தேன். நீங்கள் என்னுடைய சத்தத்தை எவ்வளவு தெளிவாக கேட்கிறீர்களோ அவ்வளவு தெளிவாக அந்த சத்தத்தையும் என்னால் கேட்க முடிந்தது. நான், "ஒன்று இந்த வழியிலிருந்து வர வேண்டும், ஒன்று பின்னாலுள்ள அந்த வழியிலிருந்து வர வேண்டும், ஒன்று அந்த வழியிலிருந்து வர வேண்டும்" என்றேன்.

84. நான் ஒரு சிறு மரத்தில் சாய்ந்து கொண்டு ஒரு சில நிமிடங்கள் காத்திருந்தேன். என்னால் எந்த அணிலையுமே காண முடியவில்லை, நேரம் போய்க் கொண்டிருந்தது, ஏறக்குறைய திரும்பிப் போக நேரமாகி விட்டது. நான் திரும்பி அந்த மலையைப் பார்த்தேன், மேலே – ஏறக்குறைய 125 கெஜம் தூரத்தில் என்று நினைக்கிறேன் – ஒரு மரத்தின் அடிக்கட்டையில் ஏதோவோன்று இருந்தது போன்று காணப்பட்டதை நான் பார்த்தேன்.

அது ஒரு மிகச்சிறிய சாம்பல் நிற அணில். நான் சிறு தொலைநோக்கி வழியாக நோக்கினேன், அது ஒரு அணிலா இல்லையா என்று கூற முடியவில்லை. நான் தொடர்ந்து அதைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன்; அது அந்த மரத்தின் அடிக்கட்டையை விட்டு வெளியே குதித்து, ஒரு மரத்தின் பக்கவாட்டு பகுதி வழியாகப் போகத் தொடங்கினது. நல்லது, அது அதிக தூரத்தில் சுடும்படியானதாக இருந்தது. ஆனால் நான் அப்படியே முழங்காலில் இருந்தபடி, என் கையின் பக்கவாட்டில் துப்பாக்கியை வைத்தபடி குறிபார்த்து, அந்த அணிலைக் கொன்றேன்.

85. நான், "அப்படியானால், அடுத்த அணில் இந்த வழியிலிருந்து வர வேண்டியிருக்கும்" என்றேன். எனவே நான் உற்சாகம் மேலிட்டவனாய் அந்த மரத்தைப் பார்த்து, "அது இந்த வழியிலிருந்து வர வேண்டும்" என்றேன். நான் ஏறக்குறைய 15 நிமிடங்கள் காத்திருந்தேன், இதோ ஒரு அணில் வருகிறது. எனவே நான் வேறொரு குண்டை துப்பாக்கியில் இட்டு, இலக்கை குறிவைத்தேன். நான் குறிபார்க்கத் தொடங்கின போது, இரண்டாவது அணில் வந்தது. நான், "ஓ, கர்த்தருக்கு

ஸ்தோத்திரம்; அதோ இரண்டாவது அணில் உள்ளது, அங்கே அவைகள் உள்ளன" என்றேன். எனவே நான் எழுந்து முதலாவதைச் சுட்டு, அதைக் கொன்றேன், நான் அதைச் சரியாக அதன் கண்ணைத் துளைக்குமாறு சுட்டேன்.

86. அதன்பிறகு-பிறகு இந்த வேறொரு அணில் ஒரு மரத்துண்டின் மேல் துள்ளிக் குதித்து ஓடியது, அது அந்த மரத்துண்டின் மேலாக ஓடி, ஒரு வகை மரத்தின் கொட்டையை (hickory nut) எடுத்து அதை சாப்பிடத் தொடங்கியது. ஏறக்குறைய 50 கெஜம் தூரத்திலிருந்து அதை நல்ல விதமாக சுட்டேன். நான், "அங்கே என்னுடைய இரண்டாவது அணில் உள்ளது; அதாவது ஒன்று, இரண்டு, மூன்று அணில்கள் உள்ளன, சரியாக எவ்வளவு கேட்டேனோ அவ்வளவு அணில்கள்" என்று எண்ணினேன். நான் என்னுடைய துப்பாக்கியில் குறிபார்த்து சுட்டேன், (ஆனால்) நான் அந்த மரத்தைச் சுட்டு விட்டேன். இப்பொழுது, இந்த வருடத்தில் ஏறக்குறைய 149 அணில்களைச் சுட்டதில், நான் ஐந்து துப்பாக்கி குண்டுகளை மாத்திரமே தவறவிட்டேன். எனவே அப்போது, நான், "நான் அந்த அணிலை எப்படி தவற

விட்டேன்?" என்று நினைத்தேன். அது அந்த அணிலை ஒருபோதும் பயப்படுத்திவிட வில்லை, அது துள்ளிக் குதித்து, அந்த மரத்துண்டின் வேறொரு பக்கத்திற்கு திரும்ப ஓடிப்போய், நின்றபடி சுற்றிலும் நோக்கிப்பார்த்தது. நான் வேறொரு குண்டை துப்பாக்கியில் நிரப்பி விட்டு, "அதை இந்த தடவை நிச்சயமாகப் பிடிப்பேன்" என்று நினைத்தேன். நான் சரியாக குறுக்காக குறிபார்த்தேன் - துப்பாக்கியின் ஒரு பகுதியை (hair) சரியாக அதனுடைய கண்ணின் குறுக்காக வைத்து, விசையை இழுத்தேன்; (ஆனால்) நான் அதற்குக் கீழே ஏறக்குறைய இரண்டு அடி தூரத்தில் தான் சுட்டேன். நான், "என்னே, இந்த துப்பாக்கி நல்ல நிலையில் இல்லையே. இந்தத் துப்பாக்கியில் ஏதோ தவறு உள்ளது" என்றேன். சிந்திக்கவில்லை. பிறகு அது அந்த மரத்துண்டை விட்டு வெளியே குதித்து என்னிடமிருந்து அதன் பக்கத்தில் ஓடி விட்டது. நான், "நல்லது, நான் பக்கவாட்டு திசையில் வைத்து நீண்ட நேரமாக ஒரு அணிலையும் சுடவில்லையே, ஆனால் இந்த துப்பாக்கி செயலிழந்து போய் விட்டதா இல்லையா என்று பார்க்கப் போகிறேன். நான் இந்த தடவை அதை நிச்சயமாகப் பிடிப்பேன். நான்

ஒருவேளை குளிரினாலும் நடுங்கிக் கொண்டும் இருக்கலாம்" என்றேன். எனவே நான் ஒரு சிறு புதரண்டை சென்று துப்பாக்கியை அப்புதரில் சாய்த்து வைத்தேன், அது சரியாக பக்கவாட்டில் இருக்கும் மட்டுமாக குறிபார்த்தேன், ஏறக்குறைய 35 கெஜம் தூரத்திற்கு அதிகமாக அது இருக்கவில்லை; அந்த அணிலோ குன்றில் ஓடிக் கொண்டேயிருந்தது. சரியாக அதன் மையப்பகுதிக்கு நேராக துப்பாக்கியை வைத்து, விசையை இழுத்தேன், நான் எங்கு சுட்டேன் என்பதே எனக்குத் தெரியவில்லை; அது அணிலின் மேல் படவில்லை. நான் என்னுடைய சிறு துப்பாக்கியிலிருந்து குண்டுகளை வெளியே எடுத்தேன், இப்படியிருக்க அந்த அணில் அக்குன்றின் மேலே போய் விட்டது. அப்பொழுது நான், "நான் மூன்று சரியான குண்டுகளைத் தவற விட்டு விட்டேன், இந்த முழு சீசனிலும் ஐந்து குண்டுகளை மட்டுமே தவறவிட்டிருக்கிறேன். அது எங்ஙனமிருக்க முடியும்?" என்று நினைத்தேன். அதன்பிறகு நான், "என்னால் அந்த அணிலைப் பிடிக்க முடியவில்லையே. மற்றொன்று இந்த வழியிலிருந்து வர வேண்டும் என்று நான் கூறினேனே" என்று எண்ணும்படி நேரிட்டது. அவைகளில் இரண்டு அணில்கள்

அங்கே இருந்தன. ஆனால் அவருடைய வார்த்தை பரிபூரணமாயுள்ளது, பாருங்கள்.

87. பிறகு நான் ஏறக்குறைய இருட்டும் வரையில் காத்திருக்கத் தொடங்கினேன். நான், "அந்த மற்ற அணில் வருமானால், நான் அதை எனக்கு மிக அருகில் வைத்து சுடப் போகிறேன், அவ்விதமாகத்தான் செய்ய வேண்டும், ஏனென்றால் இங்கே ஒரு புதர் உள்ளது, அது இந்த புதர் வழியாகத் தான் வர வேண்டும்; அது வரக்கூடிய ஒரே வழி அதுதான்" என்றேன். "நல்லது," நான், "நல்லது, அது இச்சமயத்திலல்ல. ஒருக்கால் அந்த-அந்த அபிஷேகம் - ஒருக்கால் நான் வெறுமனே இந்த இரண்டு அணில்களை (மட்டுமே) பிடிக்கும்படியாக இருக்கலாம்" என்று நினைத்தேன். எனவே நான் சென்று என்னுடைய இரண்டு அணில்களையும் எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் போகத் தொடங்கினேன். அந்த பள்ளத்தாக்கில் மிகவும் இருட்டாக இருந்தது. நான் அந்தப் பள்ளத்தாக்கு வழியாக நடக்கத் தொடங்கினேன். ஏதோவொன்று என்னிடம், "அந்த மற்ற அணிலைக் குறித்து என்ன?" என்று கேட்டது.

*88. நான், "நல்லது, நான்-நான்-நான் ஏற்கனவே இரண்டு அணில்களைப் பிடித்துள்ளேன், இப்பொழுதோ மிகவும் காலதாமதமாகி விட்டது; என்னுடைய தொலைநோக்கியைக் கொண்டு என்னால் பார்ப்பது கூட கடினமாக உள்ளது, (பாருங்கள்?), இப்பொழுது இன்னுமொரு அணிலைப் பிடிப்பதற்கு மிகவும் காலம் கடந்து விட்டது" என்று கூறி விட்டு கீழே நடக்க ஆரம்பித்தேன்; ஏதோவொன்று, "நீ திரும்பிச் சென்று மற்றொரு அணிலையும் பிடித்துக் கொள். நீ ஏற்கனவே அதைச் சொல்லியிருக்கிறாய்" என்றது. எனவே நான் திரும்பிச் சென்றேன், நான் ஏறக்குறைய பத்து அடிகள் எடுத்து வைக்கவில்லை (இப்பொழுது, கூர்ந்து கவனியுங்கள்.) என்னிடமிருந்து ஏறக்குறைய அறுபது அல்லது எழுபது கெஜம் தூரத்தில் இருந்த ஒரு மரத்தில் ஒரு அணில் ஓடியதைக் கண்டேன். அது மிகவும் இருட்டான வேளையாய் இருந்தது, அந்த மலையின் உச்சியில் வெளிச்சம் இருந்திருக்க வேண்டும், அல்லது என்னால் அந்த அணிலைப் பார்த்திருக்க முடியாது. நான்-நான் துப்பாக்கியை குறிபார்த்தேன். என்னால் அந்த அணிலைக் காண முடியவில்லை, நான் தொடர்ந்து*

முன்னும் பின்னுமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன், அப்போது நான், “அந்த அணில் எங்கிருக்கிறது?” என்று எண்ணினேன்.

*89.* சிறிது கழிந்து அந்த மரத்தின் கிளை ஒன்று அப்படியே எந்த அசைவும் இல்லாமல் இருந்ததைப் போன்று காணப்பட்டது; நான், “அதுதான் அதனுடைய தலை” என்று நினைத்தேன். எனவே நான் சுட்டேன். அந்த அணிலோ அந்த மரத்தை விட்டு கீழே குதித்து ஓடி விட்டது, ஏதோவொன்று அந்த இலைகளில் படும் சத்தத்தை நான் கேட்டேன்; நான், “அது வெளியே குதித்திருக்க வேண்டும்” என்று நினைத்தேன். ஏறக்குறைய அந்த சமயத்தில், அதிலிருந்து சுமார் 15 கெஜம் தூரத்தில், வேறொரு அணில் ஒரு மரத்தின் மேல் ஓடியது. நான், “நான் தவறவிட்டு விட்ட அந்த அணில் அதுதான். அது சுற்றி சுற்றி ஓடுகிறது, அது அந்த மரத்தின் மேல் ஓடுகிறது” என்றேன். எனவே நான் மிக அருகிலிருந்து கவனித்தேன். அங்கே மிகவும் இருட்டாகவும், காற்று பலமாக அடித்துக் கொண்டுமிருந்தது. ஏதோவொன்று சில இலைகளில் அசைவதை நான் காண்பதாக நினைத்தேன்; அப்பொழுது நான், “நல்லது, நான்-நான் எப்படியும் அதை சுடப் போகிறேன்”

என்று நினைத்து, அதை சுட்டேன்; அந்த அணில் சுடப்பட்டு தரையில் விழும் சத்தத்தை நான் கேட்டேன். நான் உண்மையாகவே அந்த அணிலைக் கொன்று விட்டேன். நல்லது, நான், "நான் இதை அந்த மரத்தில் வைத்து தவற விட்டிருந்தேன், ஆனால் இதோ அது கிடைத்து விட்டது, அந்த வழியிலிருந்து வந்த சிறு அணில். நான் போய் அதை எடுப்பேன்" என்றேன். எனவே நான் அந்தக் குன்றின் மேல் நடந்து சென்றேன், நான் இந்த முதலாவது மரத்தை அடைந்த போது, அங்கே என்னுடைய அணில் விழுந்து கிடந்தது. மிகச்சரியாக வரிசையில் முதலாவது வந்த அணில் அதுதான், நான் அதைக் குறிவைத்திருந்தேன். பரலோகத்திலிருக்கிற தேவன் அது உண்மை என்பதை அறிவார். சரியாக நான் அதை குறிவைத்த அணிலே தான்... நல்லது, நான் அங்கு கடந்து சென்றேன், நான், "நல்லது, எனக்கு நான்கு அணில்கள் ஆகி விட்டன. நல்ல அளவுடைய ஒன்றை அவர் எனக்குக் கொடுத்திருக்கிறார். அது நல்லது. நான் மூன்றைக் கூறினேன், எனக்கு நான்கு கிடைத்திருக்கிறது. அது நல்லது" என்றேன்.

*90.* எனவே மற்ற அணிலை எடுத்துக் கொள்வதற்காக நான் சென்றேன், அதுவோ அங்கேயில்லை. இருப்பினும் நான் அந்த அணிலைக் கொன்றேன் என்பதை அறிந்திருந்தேன். நல்லது, நான் அங்கே சுற்றிலும் எல்லாவிடங்களிலும் அதைத் தேடிப் பார்த்தேன். நான் காத்திருந்து, அந்த இலைகளினூடாக அந்த இருளில் என் கரங்களால் அதைத் தடவித் தேடிப் பார்த்தேன். முறிந்து கிடந்த ஒரு பழைய மரத்துண்டையும் மற்றும் யாவற்றையும் திறந்து பார்த்தேன். அது அப்படியே காயமுற்று, நகர்ந்து சென்றிருக்க வேண்டும் என்று நினைத்தேன். இறுதியாக நான் முறிந்து கிடந்த அடிமரக்கட்டையில் இருந்த ஒரு சிறு துவாரத்தில் அதைக் கண்டு பிடித்தேன். நான் என்னுடைய குச்சியை அங்கே உள்ளே இட்டு அதை இழுக்கத் துவங்கினேன்; நான் ஏதோவொன்று உள்ளே விழுவதை உணர்ந்தேன், அப்போது நான், "இது அந்த அணில் தான், ஆனால் என்னுடைய கரத்தை உள்ளே போடுவதற்கு இந்த துவாரம் மிகவும் சிறியதாக உள்ளது; நான் இதை வெட்டி முறித்துப் போடும்படி ஒரு கோடாரி அல்லது ஏதோவொன்றை எடுத்து வர வேண்டும்" என்றேன். எனவே நான் ஒரு பெரிய கல்

அல்லது பெரிய துண்டை அதன் மேல் வைத்து விட்டு அங்கிருந்து கீழே சென்றேன்.

*91.* நான் அந்த மலையின் கீழே வந்து சேர்ந்த போது, என் சகோதரர்களிடம் அதைக் கூறினேன். அவர்கள் கர்த்தரைத் துதித்து சத்தமிடத் துவங்கினர். அந்த இரவில், அங்கு வந்து கூடியிருந்த ஒரு கூட்டம் மலைவாழ் மக்களிடம் (mountain people) நான் அதைக் கூறிக் கொண்டிருந்தேன். நாங்கள் எல்லாரும் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருந்தோம். என்னுடைய சபையைச் சேர்ந்த டோனி என்ற பெயருடைய என்னுடைய டீக்கன்மார்களில் ஒருவர், அவர்-அவர் என்னோடு இருந்தார். அந்த இரவில், நாங்கள் படுக்கைக்குப் போகத் துவங்கின போது, அவர் அந்த ஜனங்களுக்கு முன்பாக ஜெபித்தார்; அவர், "இப்பொழுதும், கர்த்தாவே" என்று ஜெபித்தார் - ஜெபத்தை நடத்தும்படி நாங்கள் அவரைக் கேட்டுக் கொண்டோம் - அவர், "இப்பொழுதும், கர்த்தாவே, எங்கள் சகோதரன் உண்மையைக் கூறியிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தும்படி, அவர் நாளைக்கு அந்த மரத்துண்டில் அந்த அணிலைக் கண்டுபிடிக்கட்டும், அப்போது அவர் உண்மையைக் கூறியிருக்கிறார் என்பதை

நாங்கள் அறிந்து கொள்வோம்" என்றார். அப்போது என்னுடைய இருதயமே அப்படியே நின்று விடுவது போன்று தோன்றியது. "நான் உண்மையைக் கூறியிருக்கிறேன் என்று அறியும்படிக்கா? அவ்விதமான ஏதோவொன்றா, அதைக் குறித்து நான் ஒரு பொய் பேசினேனா? அப்படிப்பட்ட ஒரு மாய்மாலக்காரனை தேவன் தடுத்து நிறுத்தி விடுவாரே." மேலும் நான், "என்னை நேசிக்கிற, அந்த பண்பாற்றலுடைய ஒரு மனிதன் எப்படி, தன்னுடைய மனைவி மரித்துக் கொண்டிருக்கிறவளாய் தரையின் மேல் படுத்த படுக்கையாய் கிடந்து, மருத்துவர்கள் அவளைக் கைவிட்டிருக்க, (நான்) சென்று அவளுக்காக ஜெபத்தை ஏறெடுத்த போது, அவள் எழுந்து என்னோடு சபைக்கு வந்தாளே. அம்மனிதனால் எப்படி என்னுடைய வார்த்தையை கேள்வி கேட்க முடிந்தது? அவரால் எவ்வாறு அதைக் கூற (முடிந்தது)?" என்று நினைத்தேன். மற்ற சகோதரர்களோ அதை விளங்கிக் கொண்டார்கள்.

**92.** அடுத்த நாள் காலையில், பகல் வெளிச்சம் வருவதற்கு முன்பாக அதிகாலையில், மேஜை அருகில் வைத்து, அவர், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நாம் மேலே சென்று

உம்முடைய அணிலை எடுத்துக் கொண்டு வருவோம்; எப்படியும் நாம் அதை இன்றே எடுத்து விடுவோம், ஏனென்றால் அது அங்கே இருக்கும்" என்றார்.

*93.* நான், "சகோதரன் டோனி அவர்களே, நீர் அதை சற்றும் புரிந்து கொள்ளவில்லை. நான் ஊக்குவித்தலின் கீழ் அதை உரைத்த போது, நான் மூன்று அணில்கள் என்றேன். அந்த நான்காவது அணிலுக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது" என்றேன்.

"ஓ," அவர், "அந்த அணில் எப்படியும் அந்த மரத்துண்டில் இருக்கிறது; அதன்மூலமாக நாம் அதை அறிந்து கொள்வோம்" என்று கூறினார்.

*94.* நான் அந்த மேசையின் மறு பக்கத்தை நோக்கிப் பார்த்து, "சகோதரன் டோனி, நான் உம்மிடம் உண்மையைத் தான் கூறுகிறேன் என்று உமக்கு-உமக்கு சந்தேகமாய் இருக்கிறதா?" என்று நினைத்தேன். நான் அதைக் கூறவில்லை; சகோதரர்கள் ஒருவர் மற்றவரை நோக்கிப் பார்த்தனர். நாங்கள் காட்டை நோக்கிச் சென்றோம். நாங்கள் வித்தியாசமான வழிகளில் கார்களை விட்டு வெளியேறத் துவங்கின போது, நல்லது, "என்னுடைய அணில் அங்கேயிருந்தால், நான் சென்று

என்னுடைய அணிலை எடுத்துக் கொள்வேன். பிறகு, நான் திரும்பிச் சென்று சகோதரன் டோனியிடம் கூறுவேன்" என்று நினைத்தேன். ஆனால் ஏதோவொன்று அப்படியே முன்னோக்கி செல்லும்படி, என்னைத் தொடர்ந்து உந்தித் தள்ளிக் கொண்டேயிருந்தது. நான்... தொடர்ந்து சென்றேன். இப்பொழுது, அது நான் இங்கு வருவதற்கு முன்பாக சற்றேறக்குறைய ஒரு வார காலம் இருக்கும். நான் தொடர்ந்து மேலே சென்றேன். நான் அங்கே மேலே சென்று அடையத் துவங்கும் நேரத்தில், ஏதோவொன்று என்னிடம், "அந்த அணில் அங்கே இல்லை என்றால் என்னவாகும்? இப்பொழுது, என்னவாகும்? அது உண்மையல்ல என்று உன்னுடைய சொந்த டீக்கனே கூறுவார்" கூறினது. இப்பொழுது, என் இருதயத்தில் என் அறிவுக்கு எட்டினவரையில், இந்த வார்த்தைகள் உண்மை என்றும், மிகச் சரியானது என்றும், பரிபூரணமானது என்றும் கர்த்தர் அறிவார்.

நான் தொடர்ந்து நடக்கத் துவங்கினேன், அப்போது நான், "நல்லது, அது அங்கேயிருக்கிறது என்று நான் நிச்சயமாகவே நம்பிக்கையுடையவனாய் இருக்கிறேன். அது நிச்சயமான ஒரு காரியம்: நான் நிச்சயமாகவே

அதை நம்புகிறேன்" என்று நினைத்தேன். நான் அந்த அணிலைக் குறித்து ஒருபோதும் எதையும் சொல்லியிருக்கவில்லை; அது இருந்தது... நீங்கள் எல்லாருமே அதைப் புரிந்து கொள்கிறீர்கள், அது எதை-எதைப் பற்றியது என்று எத்தனை பேர் புரிந்து கொள்கிறீர்கள்? நிச்சயமாக. நான் மூன்று அணில்களைக் குறித்து தான் உரைத்திருந்தேன். நான்காவது அணிலோடு அதற்கு எந்த சம்பந்தமும் இல்லாதிருந்தது. ஆனால் எவ்வாறு பயிற்றுவிப்பது என்றும் என்ன செய்ய வேண்டும் என்றும் கர்த்தருக்குத் தெரியும்.

இப்படியிருக்க நான் அங்கே மேலே போய்க் கொண்டேயிருந்தேன், அந்த அபிஷேகம் மீண்டும் என்மேல் வந்து, "அது அங்கே இல்லாவிட்டால், அது அங்கே இருக்கும் என்று கூறு, நீ அந்த அணிலைக் கண்டு பிடிப்பாய்" என்றார்.

95. நான், "கர்த்தாவே, நான் இப்பொழுது உம்முடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிறேன். நான் அந்த அணிலை கண்டுபிடிக்க வேண்டும்" என்றேன். நான் மேலே அந்த மலையில் சென்றேன். நான், "இனிமேல் நான் பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் நான் அதைக்

கண்டுபிடிக்கப் போகிறேன், அவ்வளவு தான். நான் அதைக் கூறி விட்டேன். அந்த அபிஷேகம் என்மேல் இருந்து, நான் எதையாகிலும் கூறும்போது, அது அவ்விதமாகவே நடக்கும் என்று கர்த்தர் என்னிடம் கூறினாரே. எனவே நான் தொடர்ந்து நடந்து செல்கிறேன்" என்று நினைத்தேன்.

*96.* நான் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் தேடிப் பார்த்தேன்; நான் தேடினேன், நான் மலையிலிருந்து கீழிறங்கி திரும்பிச் செல்ல ஏறக்குறைய 15 நிமிடங்கள் இருந்தன. நான், "நான் சென்று என்னுடைய அணிலை எடுத்துக் கொண்டால் நல்லது" என்று நினைத்தேன். நான் அங்கே மேலே சென்று, அந்த துவாரத்திலிருந்த பெரிய கல்லை வெளியே இழுத்து, அங்கே உள்ளே தடவி (தேடிப்) பார்க்கத் துவங்கினேன்; என்னால் அதை உணர முடிந்தது. நான் அதை எடுத்தேன், ஏதோவொன்று கீழே விழுவது போன்று உணர்ந்தேன், அதைப் போன்று, அந்தக் குச்சியின் முனையிலிருந்த அந்த அணில் கீழே விழுவது போன்று உணர்ந்தேன். என்னிடம் ஒரு பெரிய பழைய வேட்டை கத்தி இருந்தது, நான் ஒரு பெரிய கல்லை எடுத்து, என்னுடைய கரம் உள்ளே போகுமளவிற்கு,

அந்த துவாரத்தை போதுமான அளவு பெரியதாக வெட்டினேன். நான் அங்கே கீழே உற்றுப் பார்த்தேன்; அங்கே விழுந்து கிடந்திருந்த கொஞ்சம் வேர்களை அதை விட்டு எடுத்தேன், இந்தப் பழைய முறிந்த அடிமரக்கட்டையில் கிடந்த கொஞ்சம் வேர்களை எடுத்து விட்டு, நான், "ஓ என்னே, நாம் அங்கே சரியாக 9 மணிக்கு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன், இந்நிலையில் இப்பொழுது அணிலே இல்லை என்று நினைக்கிறேன்" என்று எண்ணினேன்.

97. ஓ என்னே, அந்தக் காலை வேளை பயங்கரமாக இருந்தது; ஒரு பனிப்புயல் அடித்துக் கொண்டிருந்தது. நான், "இது பயங்கரமாக உள்ளதே" என்று எண்ணினேன். எனவே நான், "நல்லது, நான் அதை நிரூபித்துக் காட்டக்கூடிய ஒரே ஒரு காரியம் தான் இருக்கிறது. இப்பொழுதும், அது - கர்த்தாவே, இது உம்முடைய தவறல்ல. ஏனென்றால் அதை உரைக்கும்படி நீர்-நீர் என்னிடம் கூறினபோது, அந்த மூன்று அணில்களுக்காகவே நான் அதை உரைத்தேன், அந்த மூன்று அணில்கள் அங்கே இருந்தன. ஆனால் சகோதரன் டோனி அதை அப்படியே தவறாய் புரிந்து கொண்டார்,

அவ்வளவுதான்” என்று நினைத்தேன். மேலும் நான், “நான் கீழே திரும்பிச் சென்று, அவரையும் மற்ற சகோதரனையும் மேலே அழைத்து வந்து, இங்கே கூட்டிக் கொண்டு வந்து, இந்த அடிமரக்கட்டை எங்கேயிருக்கிறது என்று காண்பித்து, நான் சரியாக இருக்கிறேன் என்று நான் நினைப்பதை அவர்கள் அறியச் செய்ய விரும்புகிறேன். அந்த அணில் அங்கே இருந்தது என்பதை நான் அறிந்துள்ளதைக் குறித்துள்ள உண்மையை நான் கூறினேனே” என்று கூறினேன்.

*98.* நான் அதை வைத்துக் கொண்டு - அந்த மலையின் கீழே போகத் துவங்கினேன், ஏதோவொன்று என்னைப் பார்த்து, “ஆனால் நீ மேலே வந்து, அந்த அணிலைக் கண்டுபிடித்துக் கொள்வாய் என்று சொன்னாயே” என்றது. ஆமென். ஓ, அது எனக்கு என்ன செய்கிறது என்பதை நீங்கள் சற்றும் அறிய மாட்டீர்கள். “நீ அந்த அணிலைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நீ சொன்னாயே.”

*99.* நான், “நான் அந்த அணிலை எங்கே கண்டுபிடிக்கலாம்? இதோ இந்தக் காடு உள்ளது, ஒரு மரத்தின் இலை அல்ல, அவைகள் எல்லாமே இங்கே சுற்றிலும் குவிந்து

காணப்படுகின்றன. அந்த அணில் விழுந்த மரம் அங்கேயுள்ளது. அது மறைந்திருக்கக் கூடிய வெறும் ஒரே காரியம் தான் இங்கேயுள்ளது, அது இந்த மரத்துண்டின் கீழே தான் இருக்க முடியும், நான் அதிலிருந்த ஒவ்வொரு சிறிய துண்டையும் வெளியே எடுத்து விட்டேன். இந்த மரத்தில் வேறெங்குமே வேறு துவாரம் இல்லையே, (அது இருக்கக்கூடிய) ஒரே இடம் இது மாத்திரமே" என்று நினைத்தேன்.

ஆனால் அவர், "நீ அதைக் கண்டுபிடிப்பாய் என்று சொன்னாயே" என்றார்.

*100.* நல்லது, இலைகளிலும் மற்றும் யாவற்றிலும் நான் புரட்டி புரட்டி தேடிப்பார்த்து விட்டேன். நான், "ஓ, பில்லி, நீ விலகி அடி ஆழத்தில் போய் விட்டிருக்கிறாய்" என்று நினைத்தேன். நான் தொடர்ந்து கீழே போகத் துவங்கினேன், (போக) ஆரம்பித்தேன்... "ஆனால் நீ அதைக் கண்டுபிடிப்பாய் என்று சொன்னாயே" என்றது.

*101.* நான், "அது சரிதான்" என்று நினைத்தேன். அந்த அபிஷேகம் என்மேல் இருந்த போது, "நான் அந்த அணிலைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று சொன்னேன். என்னுடைய ஊழியம் மீண்டும் துவங்குவதற்கு

அது ஒரு உறுதிப்பாடாக இருக்குமானால், அந்த அணில் இங்கே ஏதோவொரு இடத்தில் இருக்க வேண்டும். நான், "என்னால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லையே. அது எங்கே இருக்கிறது?" என்று சொன்னேன்.

*102.* ஏதோவொன்று, "அந்த மரப்பட்டை துண்டின் கீழே பார்" என்றது. நான் சென்று அதை எடுத்தேன் - பொறுக்கி எடுக்கத் துவங்கினேன் - நான், "ஆமாம், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அது இந்த மரப்பட்டையின் கீழே தான் இருக்கிறது" என்றேன்.

நான் அந்த மரப்பட்டைத் துண்டை எடுக்கும்படி சென்றேன், ஏதோவொன்று, "ஆனால் அது அங்கே கீழே இல்லை என்றால் என்னவாகும்?" என்றது.

*103.* "ஓ," நான், "அது அங்கே கீழே இருக்கும்" என்றேன். நான் அதை பொறுக்கி எடுத்தேன், அங்கே எந்த அணிலுமே இல்லாதிருந்தது. நான், "அங்கே ஏதோவொன்று வினோதமாயுள்ளதே" என்று நினைத்தேன். இப்பொழுது... ஆனால் நான், "அங்கே மூன்று அணில்கள் இருக்கும் என்று நான் கூறின அதே ஊக்குவித்தல் தான் அது, அது அங்கே இருக்கும் என்று நான் கூறின போது அதே ஊக்குவித்தல்

என் மேல் இருந்ததே, எனவே அதைத் தேடி எடுத்து விடுவேன்...” என்றேன். நான் மீண்டும் அங்கே கீழே நோக்கிப் பார்த்தேன், அந்த இலைகளின் கீழிருந்து வெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருந்த இரண்டு சிறிய சாம்பல் நிறமான வேர்பகுதிகள் இருந்ததை நான் கண்டேன். நான் அதை வெளியே எடுத்தேன், அங்கே என்னுடைய அணில் இருந்தது.

*104. இப்பொழுது, ஒரு சிறிய ஐயர்லாந்து நாட்டுக்காரன் (Irishman) சத்தமிடுவதைக் குறித்து பேசுகிறீர்கள்; நான் அந்த மலையில் சத்தமிட்டதை நீங்கள் கேட்டிருக்க வேண்டும். நான் உண்மையாகவே ஒரு சந்தோஷமான மனிதனாக இருந்தேன். நான் வீட்டிற்குச் சென்று அதைக் குறித்து எல்லாரிடமும் கூறினேன். என்னே, நாங்கள் அனைவரும் எப்படியாக களிகூர்ந்து கொண்டிருந்தோம். சகோதரன் டோனி, “சகோதரன் பிரன்ஹாமே, நான் அந்த விதமாக ஜெபித்தேனா என்று எனக்குத் தெரியவில்லையே” என்றார்.*

*நான், “ஆனால் நீர் அவ்வாறு தான் ஜெபித்தீர்” என்றேன். மேலும் சகோதரன் சார்லியும் அவர்களும் அதைக் குறித்துப் பேசிக்*

கொண்டிருந்தனர், அவர்-அவர் எப்படியாக அந்தவிதமாக ஜெபித்தார் என்று.

---








Doughty






# காட்டிலே

சகோ. பிரன்ஹாம்
அவர்களின் அனுபவங்கள்

1

